

# ரமணோதயம்

ஜூலை 2013
காலாண்டு

அருணைவிஜய இதழ்
விலை ₹ 20

# ஓர் அன்பு வேண்டுகோள்

ரமணோதயம் வாசக அன்பர்களே!

ரமணோதயம் கடந்த பன்னிரண்டு ஆண்டுகளாக பொருளாதார தளர்வுகளுக்கிடையிலும் தனது சேவையில் எவ்வித சோர்வுமின்றி ரமண அன்பர்களுக்குச் சேவை செய்வதையே இலட்சியமாகக் கொண்டு சிறப்பாகச் செயல்பட்டு வருவது சொல்லித் தெரிவதில்லை. தனது பதினோறாம் ஆண்டில் அடியெடுத்து வைக்கும் இந்த நல்வேளையில் இதன் நிர்வாகம் ரமண அன்பர்கள் முன் வைக்க வேண்டிய அன்பு வேண்டுகோள் ஒன்றுள்ளது. இதுகாறும் இதனைப் பேணி வளர்த்த பெருமையனைத்தும் ரமணோதய வாசகர்களையே சாரும் என்பதில் எவ்வித ஐயமுமில்லை. இனியும் ரமணோதயம் தொடர்ந்து பொருளாதாரத் தளர்வின்றி தனது பணியைத் தொடர வேண்டுமெனில் அதற்கான வைப்பு நிதி மிகவும் வலுவான நிலையில் வைக்கப்பட வேண்டிய நிர்ப்பந்தம் உருவாகியுள்ளது. தொடர்ந்து எவ்விதப் பொருளாதாரத் தடங்கலுமில்லாமல் இதன் பணி தொடர குறைந்தபட்சம் ரூபாய் பத்து இலட்சம் வைப்பு நிதி உருவாக்கப் பட வேண்டும். இதற்கு பகவானைப் பிரார்த்திப்பதுடன் உங்களைத்தான் இப்பொருளுதவியை அளிக்க வேண்டும் என வேண்டுகிறோம். இந்த வைப்புத் தொகையின் கணக்கில் பொருளுதவி செய்ய தாங்கள் ஆயிரம் மற்றும் அதன் மடங்குகளாக பணமாகவோ அல்லது காசோலையாகவோ “Ramana Kendra Trust — a/c Ramanodhayam” என்னும் கணக்கிற்கு செலுத்த வேண்டுகிறோம். இத்தொகை அளிப்போருக்கு S80G பிரிவின் கீழ் வருமான வரி விலக்கு உண்டு.

என்றும் பகவான் பணியில்,
ரமண கேந்திரா டிரஸ்ட்

உதயம் 12 ஓம் நமோ பகவதே ஸ்ரீ ரமணாய மலர் 4

# ரமணோதயம்

நானுதியாதுள்ள நிலை நாமதுவாய் உள்ள நிலை

அருணை விஜய இதழ்

ஜூலை 2013

**ஆசிரியர்:** Dr. S. ராம் மோஹன்

**இணை ஆசிரியர்:** தியாகராஜன்

**ஆலோசகர்கள்:**

ஏ.வி. சுப்ரமணியன், ஜா. ஜயராமன், சந்திரமௌலி

- கட்டுரைகள், ஆண்டு சந்தா, விளம்பரங்கள் குறித்த அனைத்து கடிதத் தொடர்புகளுக்கும் ஸ்ரீ ரமண கேந்திர அலுவலக முகவரிக்கு அனுப்பப்பட வேண்டும்.
- கட்டுரைகளுக்கு சன்மானம் எதுவும் கொடுக்கப்பட மாட்டாது. பிரசுரமாகாத கட்டுரைகள் வேண்டுகோளின்பேரில் திருப்பி அனுப்பப்படும்.
- மற்றைய எழுத்தாளர்களின் கட்டுரைகளில் வெளிவரும் கருத்துகளுக்கு ஆசிரியர் பொறுப்பல்ல.

## சந்தா விவரங்கள்

**ஆண்டு சந்தா:** ₹ 75 **தனி பிரதி:** ₹ 20
**ஆயுள் சந்தா:** ₹ 1500

காசோலை/மணியார்டர் 'ரமணோதயம்' என்ற பெயரில் எடுத்து ரமண கேந்திரா டிரஸ்ட், 41, அலமேலுமங்காபுரம், மைலாப்பூர், சென்னை 600 004 என்ற முகவரிக்கு அனுப்பவும்

ரமணோதயம் தகவல் மற்றும் தொடர்புக்கு அணுகவும்:
குமார் ராஜா: 9444261296
மின்னஞ்சல்: arunamramanam@gmail.com
மேலாளர் கண்ணன்: 9940418375

வடிவமைப்பு: ஸ்ரீ ரமணாச்ரமம்

பதிப்பாளர் & அச்சிடுபவர்:
குமார் ராஜா, ரமண கேந்திரா டிரஸ்ட்
41, அலமேலுமங்காபுரம், சென்னை 600 004

உரிமை: ரமண கேந்திரா டிரஸ்ட், சென்னை 4
தொலைபேசி: 24611397

# பொருளடக்கம்

அருணை விஜய இதழ், ஜூலை 2013


| வ.எண் | பொருள் | ப.எண் |
|---|---|---|
| 1 | ஆசிரியர் உரை | 3 |
| 2 | பஜ கோவிந்தம்<br>டாக்டர் சுதா சேஷய்யன், ஜி. ஸ்ரீகாந்த் | 20 |
| 3 | ஸ்ரீஅருணாசல ரமண தர்ஸனம்<br>டாக்டர் எஸ். ராமகிருஷ்ணன் | 27 |
| 4 | ரிபுகீதை — தியாகராஜன் | 42 |
| 5 | இனிவரும் திருநாட்கள் | 49 |
| 6 | நான் யார் தெரியுமாவிலிருந்து நான் யார் வரை<br>Dr.ஏ.வி.ராஜகோபாலன் | 50 |
| 7 | சதாசிவ பிரும்மமும் ப்ரஹ்மமும் | 58 |
| 8 | H. வைத்தியநாதன் | 71 |
| 9 | செய்திகள் | 73 |
| 10 | ரமணோதயம் அன்பர்கள் ஓர் கலந்துரையாடல் | 76 |
| 11 | ரமணோதயம் காப்புநிதி<br>தொடரும் நன்கொடையாளர்கள் | 79 |

# ஆசிரியர் உரை

## ஸத்குருவின் சாட்டை ஒலி

*பகவான் தமது விளக்கங்களின்போது அடிக்கடி குறிப்பிடும் வைணவ ஞானி நம்மாழ்வார். பகவான், திருஞான சம்பந்தர் போன்று மிகச் சிறிய வயதிலேயே பூர்ண ஞானம் பெற்றவர். நம்மாழ்வார், பகவானைப் போன்றே ஆத்ம சாட்சாத்காரம் பெற்றபின் மௌனமாக திருக்குறுகூர் என்னும் ஊரில் ஒரு புளிய மரப் பொந்தில் அமர்ந்திருந்தார் நம்மாழ்வார். அப்போது மதுரகவி ஆழ்வார் விண்மீனால் வழி நடத்தப் பெற்று தம் சத்குருவை நாடி திருக்குறுகூர் நோக்கி வந்தார். மௌனத்தில் ஆழ்ந்திருந்த சத்குருவிடம் "செத்ததின் வயிற்றில் சிறியது பிறந்தால் எத்தைத் தின்று எங்கே கிடக்கும்?" என்று வினவினார். இந்தக் கேள்வியின் பொருள்: "அசித்தான - ஜடமான இந்தச் சரீரத்தில், மிகச் சிறிதான ஜீவாத்மா கர்மபலனால் குடிகொண்டிருக்கும்போது அது எதனை அனுபவித்து, எங்கே இருக்கும்?" என்பதாம்.*

*அதற்கு விடையாக நம்மாழ்வார், "அத்தைத் தின்று அங்கே கிடக்கும்." "(ஆத்ம ஞானம் அடையாதவரை) அந்த ஜீவன், அந்தப் பிறவியின் ப்ராரப்தம் காரணமாக விளையும் கர்மபலனை அனுபவித்துக் கொண்டு, உடலையே தான் என்று எண்ணி அதிலேயே லயித்துக் கொண்டு இருக்கும்!" என்று பதிலளித்தார்.*

*பகவானும் தனது தனிப்பாடல் ஒன்றில் இக்கருத்தை எழில்பட விளக்குகிறார். ஒரு நாள் அண்ணாமலை மீது*

பகவானும், கே.வி.ராமசந்திர ஐயர் என்ற அன்பரும் நடந்து கொண்டிருந்தனர். அப்போது ஒரு பறவை ஒரு வேடனால் பிடிக்கப்பட்டதை ராமசந்திர ஐயர் கண்டார். அந்தச் சம்பவம் அவருக்கு ஜீவன் முக்தியை நினைவூட்டியது. ஆத்ம விசாரம் செய்து, தன் ஆத்மாவை 'அதுவே நான்' என்று அறிந்து முக்தி பெற்ற ஜீவன், தன் உடலை விட்டு உதறிச் சென்று விடும் அல்லவா? என்ற எண்ணம் அவருக்கு எழுந்தது. அதனை அவர் ஒரு குறள் சாயலில் அமைந்த பாடலில் வெளிப்படுத்தினார்.

'வேடன் கைப்பட்ட புறவு விடப்படின்
காடும் கடந்து விடும்!'

இந்த உருவகச் செய்யுளில், வேடன் என்பது அஞ்ஞானத்தையும், புறவு (புறா) என்பது ஜீவனையும், காடு என்பது இந்தத் தேகத்தையும், விடப்படல் என்பது முக்தியையும் குறிக்கும். இதன் பொருள், அஞ்ஞானத்தின் வலையில் அகப்பட்ட ஜீவன் முக்தி அடைந்த பின், இந்த உடலை விட்டுச் சென்று விடாதா? என்பதாகும்.

பகவான் இதற்கு ஒரு வெண்பா வாயிலாக விடை அருளினார்.

'வேடன் கைப்பட்ட புறவு விடப்படின்
காடும் கடந்து விடும் என்னின் – நாடியகம்
வேடன்தான் வேறு அகல வேறான அக்காடும்
வீடாய் ஒடுங்கி விடும்.'

இதன் பொருள்: 'வேடன் கையில் அகப்பட்ட புறா விடுபடுமாயின் காட்டைத் தாண்டிப் பறந்து சென்று விடும் அல்லவா? என்று கேட்டாயே! வேடன், அப்புறாவை விட்டு விட்டுத் தன் இல்லத்தை நோக்கிப் பிரிந்து சென்று விட, புறாவின் உண்மையான கூட்டிலிருந்து வேறாக இருந்த அந்தக் காடும் கூட புறாவின் கூடாய் ஆகி, புறாவும் அங்கேயே வசித்திருக்கும்' என்பதாம்.

இதன் தத்துவப் பொருளாவது, தன்னையே நாடுகிற ஆத்ம விசாரணையினால், மனமாகிய மாயை ஆத்மாவை விட்டு நீங்கி மறையும். இதுவரை ஆன்மாவிலிருந்து வேறாய்க் கருதப்பட்டு வந்த உடலும்கூட உண்மையில் ஆத்மஸ்வரூபமே! என்று உணரப்படுகிறது. எனவே, ஞானம் பெற்ற அந்த ஜீவன்முக்தன் தனது பிராரப்த இறுதி வரை அந்தத் தேகத்திலேயே வசித்திருப்பான்.

ஜீவன் முக்தி அடைந்தபின் தேகத்தை விட்டு ஞானியின் ஆத்மா நீங்கிவிடும் என்ற நியதியில்லை. அப்படி இல்லாமல் சாதனைக் காலத்தில் 'நேதி, நேதி', 'இது நானல்ல, இது நானல்ல' என்ற ஆராய்ச்சியில் சாதகன் ஈடுபட்டு, தான் ஆத்மா மட்டுமே, தேகமல்ல என்று தியானித்துக் கொண்டிருந்த நிலை நீங்கி, அனைத்துமே நான், இந்தத் தேகமும் நான் என்ற அகண்டாகார உணர்வு அறியப் படுகிறது. 'ஸர்வம் ப்ரம்ம மயம்' என்று ஸதாஸிவ ப்ரம்மேந்திரர் பாடுவது போன்று, இந்த அகண்டாகார ஆன்ம உணர்வுக்கு அயலாக தேகம் என்ற ஒன்று தனித்துக் கிடையாது. தேகமும் நானே என்ற உண்மை ஒளிர்வதால், ஜீவன் முக்தன் அவ்வுடலில் வசிக்கிறான்! எனப் பகவான் விளக்குகிறார்.

உள்ளது நாற்பது நூலின் பதினேழாவது பாடலிலும் இதை பகவான் விளக்குகிறார்.

*'உடல்நானே தன்னை உணரார்க்கு உணர்ந்தார்க்கு;*
*உடலளவே நான், தன்உணரார்க்கு – உடல்உள்ளே*
*தன்னுணர்ந்தார்க்கு எல்லைஅறத் தான்ஒளிரும்*
*நான் இதுவே*
*இன்னவர்தம் பேதமென எண்!'*

ஆத்மாவை அறியாத அஞ்ஞானிக்கும் சரி, ஆத்மாவை அறிந்த ஞானிக்கும் சரி 'இந்த உடல் நானே' என்பது தான் அனுபவம். (ஆயினும் இந்த அனுபவத்தில் பெருத்த வேறுபாடு உள்ளது). தன்னை அறியாத

*அஞ்ஞானிக்கு, 'நான்' எனப்படும் ஆன்ம உணர்வு ஓர் எல்லைக்கு உட்பட்ட உடலின் அளவாக மட்டுமே உணரப்படுகிறது. "இந்த உடலின் உள்ளே நான் என்று எப்போதும் ஒளிர்வது எது?' என்று விசாரித்து, உடலில் வாழும்போதே உண்மையான 'நான்' என்பது எது? என்பதை அறிந்த ஞானிக்கோ, அந்த 'நான்' என்ற உணர்வு எல்லையற்ற பரமாத்ம ஸ்வரூபமாய் விளங்குகிறது" என்கிறார் பகவான். ஆன்மிக சாதனையில் ஆரம்ப நிலையில் தன்னை உடலாகக் கருதி குழம்பிக் கொண்டு இருக்கும் சாதகனுக்கு, ஆன்மிக உபதேசம் கூறுவது*

*'மனோ புத்தி அஹங்கார சித்தானி நாஹம்*
*ந சஸ்ரோத்ர ஜிஹ்வேண சக்ராண நேத்ரே*
*ந சவ்யோம பூமிர் ந தேஜோ ந வாயு:*
*சிதானந்த ரூபஸ் ஸிவோஹம் ஸிவோஹம்!'*

*(நான் மனமோ, புத்தியோ, சித்தமோ, அஹங்காரமோ அல்ல, நான் கேட்கின்ற காதோ, நாக்கோ, கண் முதலிய உறுப்புகளோ அல்ல! நான் ஆகாயம், பூமி, அக்னி, வான் போன்ற பஞ்சபூதமல்ல, நான் சிதானந்த வடிவான சிவனே! சிவனே நான்.)*

*– (சங்கரரின் நிர்வாண ஷட்கம்-1)*

*'இவையெல்லாம் பார்க்கப்படும், உணரப்படும் பொருட்களே!* (OBJECTS) *நீயே அனைத்தையும் அறிகின்ற அறிவு* (SUBJECTS)*. இவற்றை நானல்ல, நானல்ல என்று தள்ளி, அனைத்தையும் கடந்த ஆத்மாவாக உன்னை உணர்' என்ற* process of elimination *மூலம் ஆத்ம சாதனை துவங்குகிறது.*

*இந்த ஆத்ம சாதனை முற்றுப் பெறும்போது ஒரு பேராச்சர்யம் காத்திருக்கிறது. 'இதுவரை நான் விலக்கித் தள்ளிய எல்லாமும் உண்மையில் நானே; நான் என்கிற ஆத்மாவன்றி வேறு எதுவும் தனியாக இல்லை. இவையனைத்தும் ஆத்மாவின் பிரதிபலிப்பே.*

அனைத்தும் ஆத்மாவாகிய நான்தான்' என்ற process of inclusion இல் முகிழ்க்கிறது.

அஞ்ஞானிக்கு 'உடலே நான்' என்பது அனுபவம், ஞானிக்கோ 'உடலும் நான்' என்பதே அனுபவம். இந்த உடலும் என்பது இலக்கணத்தில் 'சிறப்பும்மை' என்று அழைக்கப்படுகிறது. ஆத்ம ஞானம் சித்திக்கும் போது இச்சிறப்பும்மையும் தோன்றுகிறது.

பகவான் ஏகான்ம பஞ்சகத்தில்,

'பொன்னுக்கு வேறாக பூடணம் உள்ளதோ, தன்னை விடுத்து தனு ஏது, உடல், தன்னைத் தனு உடல் (மட்டுமே) என்பான் அஞ்ஞானி! (தனுவாகிய உடலுக்கு அடிப்படையான தான் ஆகித் தன்னைக் கொள்வான் தனை அறிந்த ஞானி)' என வினா-விடை மூலம் விளக்குகிறார்.

வினா-விடையைப் பற்றிய ஒரு சுவையான குறிப்பு: 'ஞானிக்கு மனமோ தனி வியக்தியோ கிடையாது என்று பகவான் கூறுகிறீர்களே? அப்படியானால் எப்படி எங்கள் கேள்விகட்கெல்லாம் இவ்வளவு தெளிவாக பதில் கொடுக்கிறீர்கள்? இந்த விளக்கங்கள் பகவானின் மனதிலிருந்து வருபவை அல்லவா!' என்று ஒருவர் வினவினார். பகவான், 'கேள்வி எந்த மூலத்திலிருந்து உதிக்கிறதோ, அந்த மூலத்திலிருந்தே பதிலும் உதிக்கிறது' என்றார். மனத்தை அது உதிக்கும் இடம் நோக்கித் திருப்பும்போது, ஆத்மாவே ஞான குருவாய்த் தோன்றுகிறது. பௌதிக நோக்கில் காணும்போது, சத்குரு ஒரு தனி உடலாய்த் தோன்றினாலும் உண்மையில் அவர் சீடனின் ஆன்ம ஸ்வரூபமே அன்றி வேறல்ல. அந்த ஆத்மாவும் தனித் தனியாக உள்ள ஒன்று அல்ல. அனைத்திலேயும் பரவி அனைத்து உள்ளும் ஒன்றாய் ஒளிரும் ஒரே வஸ்து அதுவே. எனவே, சீடன் கேள்வி கேட்கும் போது பதில் குருவினிடம் இருந்து வருவதாய்த்

தோன்றினாலும் பதில் உண்மையில் சீடன் மனம் உதித்த இடமான ஆன்மாவிலிருந்துதான் வருகிறது. அந்த ஆத்ம ஸ்தானமும் ஸத்குருவும் ஒன்றே. இரண்டும் ஒன்றே ஆதலால், குருவின் விடைக்கு சிஷ்யனின் மனத்தை ஆத்மாவை நோக்கித் திருப்பும் சக்தி உள்ளது. சீடனது உள்ளத்தில் அருளொளியாய் விளங்கும் குருவின் சக்தி, அவனது உள்ளத்தில் தெளிவை ஏற்படுத்தி, விடையை அருளி, முழுமையான இருப்புணர்வை உணரச் செய்கிறது.

கபீர் ஒரு நாள் தன்னுடைய மகன் கமாலை பசுவிற்குப் புல் அறுத்து வர வயலுக்கு அனுப்பினார். விடிகாலையில் சென்ற கமால் நண்பகலிலும் வரவில்லை. மாலை நேரம் வந்தது, பசி தாங்காமல் பசு கத்திக் கொண்டிருந்தது. எனவே, கமாலைத் தேடிக் கொண்டு கபீர் வயலுக்குப் போனார்.

அங்கே ஒரு வினோதமான காட்சி. சூரியன் அஸ்தமனம் ஆகிக் கொண்டிருக்கிறான். தென்றல் காற்று வீசிக் கொண்டிருக்கின்றது. புற்கள், அலைகள் போல் ஆடிக் கொண்டிருந்தன. அவற்றோடு சேர்ந்து கமாலும் ஆடிக் கொண்டு இருந்தான். கபீர் அவனைப் பார்த்து, 'என்ன கமால்! ஏன் வந்த காரியத்தை மறந்து பைத்தியக்காரன் போல் ஆடிக் கொண்டு இருக்கிறாய்?' என்று கேட்டார். கமால் உடனடியாக புறஉலகத்திற்குத் திரும்பினான் 'ஓ! நான் கமால் என்பதை மறந்தே போனேன். நான் ஒரு புல்லோடு புல்லானேன். அதனோடு ஆடிக் கொண்டிருந்தேனே. நான் எதற்காக இங்கே வந்தேன் என்பதே எனக்கு மறந்து விட்டது சொல்லுங்கள், நான் எதற்காக வந்தேன்?'

'புல் அறுப்பதற்கு' என்றார் கபீர். அப்போது கமால் கூறினான்: 'ஒருவர் எப்படி தன்னைத் தானே அறுத்துக் கொள்ள முடியும்? அது சாத்தியமில்லை. நான் இன்று கண்ட புது உலகத்தில் எல்லாமே நான் தான்!' என்றான்.

கமால் என்றால் இந்தி மொழியில் அற்புதம் என்று பொருள். நாம் ஒன்றில் முழுமையாக இருக்க இந்த அற்புதம் நிகழும்.

கமால் போலவே தாயுமானவரும் தன்னையே எல்லாப் பொருளிலும் நீக்கமற கண்டார். தாயுமானவர் பாடுகிறார். நான் பூஜை செய்ய மலர் கொய்யச் சென்றேன். ஆனால் எனக்கோ அந்த பூக்களையே பறிக்க இயலவில்லை, ஏனெனில் நான் பார்க்கும் இடம் எல்லாம் உன்னையே அந்த மலரில் காணுகின்றேன்.

'பார்க்கின்ற மலரூடு நீயே இருத்தி!
அப்பனிமலர் எடுக்க மனமும் நண்ணேன்!'

எல்லா இடத்திலும் நீயே இருப்பதால் உன்னையே எடுத்து உனக்கு எப்படிப் பூஜை செய்ய இயலும். இதுவே அத்வைத சித்தாந்தம். பகவானின் பாடலில்,

'வெளிவளி தீநீர் மண்பல உயிரா
விரிவுறு பூத பௌதிகங்கள்
வெளிஒளி உன்னை யன்றிஇன்று என்னின்
வேறு யான், ஆருளன் விமலா!'

என்று இதைச் சுட்டுகிறார்.

எல்லா இடத்திலும் பரவியிருந்தாலும் அதே சமயம் பரமன் தன்னையே நாடுகின்ற அடியாரைத் தனியாகத் தேர்ந்து புடம் போட்டு பரிசோதிக்கின்றான் என்பது உண்மை. அதுவும் சாதகனின் ஆன்மிக பரிணாமத்தின் ஒரு பகுதியே. பகவானின் மணமாலையில் பகவானே இச் சோதனை பற்றிக் கூறுகிறார்

'சூது செய்தென்னைச் சோதியாது இனியுன்
சோதி உருக்காட் டருணாசலா!'

'செப்படி வித்தைகற்று இப்படி மயக்குவிட்டு
உருப்படு வித்தைகாட்டு அருணாசலா!'

நம்மை ஆன்மிகப் பாதையில் முன்னேற்று வதற்காகத்தான் பகவான் பல்வேறு பரீட்சைகளை

வைக்கிறார். ஒரு ஐ.ஐ.டியில் சேர்வதற்கே எவ்வளவு கடினமான பரிட்சை எழுத வேண்டியிருக்கிறது! பரமபதத்தில் சேர்வதென்றால் வைக்கப்படும் பரிட்சை கடினமாகத்தான் இருக்கும். ஆனால் இந்தச் சோதனைக்குப் பின் ஏற்படும் கஷ்டங்கள் எல்லாம் உடலுக்கும் மனதிற்கும்தான். நான் உடல், மனம் அல்ல; எதனாலும் பாதிக்கப் படாத ஆத்மா நான் என்ற பேரறிவு நமக்குப் பிறக்கும் வரையில் இந்தச் சோதனைகளை நாம் ஏற்று, நம்மைப் புடம் போட்டுக் கொள்ள வேண்டும்.

இறைவன் அவதாரத்திற்கும் கஷ்டம் வரவில்லையா என்ன? பூரிக்கு சென்ற புலவர் ஒருவர் பூரி ஜெகன்னாதர் கட்டை வடிவில் இருக்கக் கண்டு, ‘ஏன் எல்லா ஊரிலும் சிலை வடிவில் இருக்கும் இவன் இங்கு மட்டும் கட்டை வடிவில் இருக்கிறான்?’ என்று எண்ணி அதற்கான காரணத்தை புத்தி சாதுர்யத்தால் கண்டுபிடித்து பாடுகிறான்.

பல்லாண்டுகளுக்கு முன் மஹாவிஷ்ணுவிற்கு, பூதேவியுடன் கல்யாணம் நடந்து முடிந்தது. கைலாசபதி, விஷ்ணுவை அழைத்து, ‘உமது இரண்டு மனைவிகளுடன் கைலாசத்திற்கு விருந்துக்கு வாருங்கள்’ என்று அழைப்பு விடுத்தார். மகிழ்ச்சியடைந்த விஷ்ணுவும் பரமேஸ்வரன் விருந்துக்கு அழைத்திருக்கிறார், ‘சீக்கிரம் புறப்படுங்கள்!’ என்று தன் மனைவிமார்களைக் கூப்பிடுகிறார். பூதேவி, ‘ஸ்வாமி! என் மீது எத்தனை ஜீவன்கள் அமர்ந்திருக் கிறார்கள்! நான் எப்படி வரமுடியும்?’ என்று கேட்டாள். முதல் மனைவியான லக்ஷ்மி தேவியோ ஒரு இடத்தில் நில்லாது ஓடிக் கொண்டே இருப்பவள், அவளைப் பிடிக்க இயலாது. இரு மனைவிகளில் ஒருவர் கூட இல்லாமல் பரமேஸ்வரன் வீட்டிற்கு எப்படிப் போவது என்று எண்ணி, ‘சரி! அங்கு போக வேண்டாம்! தன் மகனாகிய மன்மதன் வீட்டிற்குச் செல்லலாம்’ என்று கிளம்பினார். அப்போது, எதிரே வந்த நாரதர், ‘எங்கே

போகிறீர்! சற்று முன்தான் மன்மதன், பரமேஸ்வரன் மேல் மலரம்பு எய்யப் போய் அவரது நெற்றிக் கண் அக்னிக்கு இரையாகிச் சாம்பலானான்!' என்றார். சரி! மாமனார் வீட்டிற்குப் போனால், 'என் பெண் இல்லாமல் தனியே வந்து நிற்கிறீரே!' என்று சமுத்திர ராஜன் அலைக்கரங்களால் தள்ளிவிட்டான்.

மனம் நொந்த விஷ்ணு, ஆதிசேஷனை வரவழைத்தார். அவன் மீது ஏறிப் படுத்துக் கொண்டார். அன்றைக்கென்று பார்த்து அவன் ஆயிரம் தலைகளாலும் 'புஸ், புஸ்' என்று மூச்சு விடுகிறான். சரி! இங்கே இனி தாங்காது வெளியே எங்கேயும் போய் விடலாம் என்று கருடனை வரவழைத்தார். வடதிசை நோக்கிப் பறந்தபோது, பெருங்காடுகள் நிறைந்த பூரி க்ஷேத்திரத்தின் மீது பார்வை விழுந்தது. அங்கே காட்டில் நிறைய பாம்புகள் ஊர்ந்து கொண்டு இருந்தன. அதைப் பார்த்த கருடன் 'ஸ்வாமீ! எனக்கு மிகவும் பசிக்கிறது என்னுடைய ஆகாரம், அதோ! கீழே உள்ளது, நான் உங்களை இங்கே இறக்கிவிட்டு, சாப்பிட்டு வருகிறேன். அது வரையில் நீங்கள் சற்றே நடந்து போய்க் கொண்டிருந்தால், சிறிது நேரத்தில் வந்து ஏற்றிக் கொள்கிறேன்!' என்றானாம்.

'அடக் கஷ்டமே! இது வரையில், நான் சொன்னதைக் கேட்டு வந்த என் சேவகர்கள், என் செல்வம் மிகுந்த மனைவியர் வரவில்லை என்ற உடன், நாம் சொல்வதைக் கேட்காத நிலை வந்துவிட்டதே!' என்று தன் கஷ்டத்தை நினைத்துக் கட்டையாய்ப் போய்விட்டானாம்! இது ஒரு சமத்கார கவியின் கற்பனை.

குருபக்தியில் தீவிர சிரத்தையும், குரு வார்த்தையில் தீவிர நம்பிக்கையுமே பூரணத்துவம் எனும் மலைச் சிகரத்தில் நம்மை ஏற்றுவிக்கும் சிறகுகள். அந்த ஆழ்ந்த நம்பிக்கையும் சிரத்தையும் இல்லையெனில், பல்லாண்டுகள் குருவின் திருவடியில் இருந்தாலும் பலன் கிட்டுவதில்லை. பதினாறு ஆண்டு காலம் பரமேஸ்வரன்

பட்டினத்தாருடன் வாழ்ந்திருந்த போதும், அவன் தான் இறைவன் என்று அடையாளம் கண்டு கொள்ள பட்டினத்தாரால் இயலவில்லை. 'காதற்ற ஊசியும் வாராது காணும் கடை வழிக்கே' என்று அவன் shock treatment கொடுத்து மறைந்த பின்னரே அவர் அகக்கண் திறந்தது. நாம் தொடக்கத்தில் கண்டபடி குருநாதர் நமக்குப் பல சோதனைகளை வைக்கக் கூடும். ஆயினும், நாம் சிரத்தையிலும், நம்பிக்கையிலும் தளராது இருப்பின், அவன் தானே வந்து நம்மைத் தலையளித்து ஆட்கொண்டருளுவான். உள்ளுணர்வினால் சீடன், தீக்ஷை பெறத் தகுந்தவனா? என்று அறிந்தபின் சத்குரு அவனைப் பல சோதனைகட்கு உட்படுத்துகிறார். குருவின் வார்த்தையில் நம்பிக்கை வைத்து, சேவையும் சாதனையும் செய்யும்போது, பகவானின் திருவருள் சாதகனிடம் அருளருவியாய் வீழ்கிறது. சாதகனின் ஆன்மிக சாதனையின் நிலையைப் பொறுத்து இறையருள் அருவியின் வீழ்ச்சி நிகழலாம். அதே பரம்பொருள் சில சாதகர்களை, 'சூது செய்து சோதிக்கவும்', 'செப்படி வித்தை கற்று மயக்குறு வித்தையிலும்' சோதனை செய்யலாம். பகவானுக்கு மிகவும் பிரியமான திபேத்திய ஞானி மிலேரப்பாவுக்கு சத்குரு பல்வேறு விதமான இன்னல் தரும் சோதனைகளைக் கொடுக்கிறார். அத்தனையிலும் தேர்ச்சி பெற்ற மிலேரபா குருவருளைப் பூர்ணமாகப் பெற்று மிகப் பெரிய ஞானியாகிறார். குருவின் அருளில் தீவிர நம்பிக்கை வைத்து அவர்தம் வார்த்தைகளை, அவை மேம்போக்கில் சரியற்றது போல் தோன்றினாலும், பிசகாது பின்பற்றுவோன் பரம ஞானத்தை அடைகின்றான்.

உபநிஷதக் கதைகளில் மிக சுவாரஸ்யமான ஒன்று ஸத்யகாம ஜாபாலனின் வரலாறு. ஸத்யகாமனின் தாயார் ஜபாலா, வீடுகளில் பணிப் பெண்ணாக வேலை பார்ப்பவள். அவளது மகன் ஸத்யகாமனுக்கு தக்க குருவிடம் சென்று வேத வேதாந்தங்களைப் பயில வேண்டும் என்ற பேராவல். எந்த ரிஷியிடம் சென்றாலும்,

*உன் தந்தை யார்? உன் கோத்திரம் எது? நல்ல பரம்பரையில் வந்த ஒருவனே எனது சீடனாகத் தகுந்தவன்! என்று கேட்கின்றனர். ஸத்யகாமன் தன் தாயிடம் சென்று, 'என் தந்தையார் யார்? என் கோத்திரம் என்ன?' என்று வினவியபோது, அவள் தெளிவாக 'மகனே! நான் பல வீடுகளில் பணிப்பெண்ணாக இருந்து வருகிறேன். அவ்வீடுகளில் இருந்த பல ஆடவர்களில் யார் உன் தந்தை, என்பதே தெரியாது, இதுதான் உண்மை' என்றாள். இதை ரிஷிகளிடம் ஸத்யகாமன் கூறியவுடன் அவர்கள் 'சிறியவனே! உயர் குலப் பிறப்பாளன் மட்டுமே எனது சீடனாக முடியும்!' என்று அனுப்பிவிட்டனர்.*

*இறுதியாக ஜாபாலன் பிரசித்தி பெற்ற கௌதம ரிஷியிடம் செல்கிறான். அவனது பிறப்பைப் பற்றிய அவரது கேள்விக்கும் இதே பதிலைக் கூறினான். சிறந்த ஞானியாகிய கௌதமர், 'சிறுவனே! உண்மையை ஒளிக்காமல் கூறிய நீயே வேதாந்தம் பயிலத் தகுந்தவன். என்னுடைய சீடனாக இன்றே சேர்வாயாக' என்றார்.*

*உள்ளுணர்வினால் ஸத்யகாமன் தீக்ஷை பெறத் தகுந்தவன் என்று அறிந்திருந்த போதிலும், அவன் மன உறுதியைச் சோதித்து, புடம் போட விரும்பிய கௌதமர் அவனுக்கு வேதம், வேதாந்தம் எதுவும் சொல்லித் தராது நானூறு வாடி வதங்கிய பசுக்களைத் தேர்ந்தெடுத்து அவற்றை நன்கு மேய்த்து ஆயிரம் பசுக்கள் ஆனபின் திரும்ப வர வேண்டும் என்று கூறி அனுப்பி விட்டார். ஸத்யகாமன் காட்டில் நீண்ட நாள் பசுக்களை சிரத்தையுடனும், குருபக்தியுடனும் மேய்த்து வந்தான். அவனது திடநம்பிக்கையைக் கண்ட வாயு, சூரியன், அக்னி போன்ற தேவதைகள், மற்றும் பசு, நீர்க் கோழி போன்ற உயிரினங்களும் கூட அவனுக்கு பிரம்ம ஞானத்தை உபதேசித்தனர்.*

*இறையருளால் பசுக்களும் நெடு நெடுவென ஒளிரும் ஆயிரம் பசுக்களாகப் பெருகின. ஆஸ்ரமத்திற்குத்*

திரும்பி வந்த ஸத்யகாமன் முகத்தில் பிரம்மதேஜஸ் ஜொலிப்பதைக் கண்டு, நடந்ததை உணர்ந்த கௌதமர் பிரம்மஞானம் பெற்ற அவனுக்கு வேதாந்த சாஸ்திரங்களையும் உபதேசித்தார்.

பேரருளின் காரணமாக சத்குரு ஏதாவதொரு உருவத்தில் சாதகரிடம் வெளிப்படுகிறார். உதாரணமாக, சூடாலை என்னும் அரசி, கும்ப முனிவரின் உருவம் கொண்டு, தன் கணவன் சிகித்வஜன் முன் தோன்றி அவனுக்குக் கைவல்யத்தை உபதேசித்தாள். ஆகாயத்தில் தோன்றிய அதிசய ஜோதி மதுரகவியாரை நம்மாழ்வாரிடத்திலும் அதேபோன்று மூன்று யூத யோகிகளை ஏசுநாதரிடமும் செலுத்தியது. தம் அரசவையிலேயே யாக்ஞவல்க்யர், அஷ்டாவக்ரர் என்னும் பெரும் ஞானியரிடமிருந்து ஜனகர் உபதேசம் பெற்றார்.

இந்த நினைவு பெறுவதும், இறை உணர்வு முகிழ்ப்பதும் சாதகனின் பக்குவ நிலையையும், முயற்சியையும் ஊக்கத்தையும் பொறுத்தே அமைகின்றன்.

‘நோக்கியே கருதி மெய் தாக்கியே பக்குவம்
ஆக்கி நீ ஆண்டருள் அருணாசலா!’

என பகவான் குறிப்பிடுகிறார். சாதகனைப் பக்குவப் படுத்துவதற்கு சத்குரு தீக்ஷை அளிக்கிறார். நோக்குதலாகிய சக்ஷு தீக்ஷை, மனதில் எண்ணுதலாகிய மானஸ தீக்ஷை, மெய் தாக்குதலாகிய ஸ்பர்ஸ தீக்ஷை என தீக்ஷை பல வகைப்படும். சக்ஷு தீக்ஷைக்கு மீனும், கருத்தினால் தீக்ஷை தருவதற்கு ஆமையும், மெய் தாக்குதலுக்கு அடைகாக்கும் பறவையும் உதாரணம் ஆகும். ஆமை, மீன், பறவை போலத் தன்னகம் கருதி நோக்கித் தடவி எனக் கைவல்ய நவநீதம் குறிப்பிடுகின்றது. சாதகனுக்கு, எங்கே, எப்போது தீக்ஷை அளிக்க வேண்டும் என்பதையும் தனது உள்ளுணர்வால்

ஸத்குரு அறிவார். தனது மகனாகிய ஸ்வேதகேதுவையே திரும்பத் திரும்பப் பரீட்சித்து ஒன்பது தடவைகளுக்குப் பின் 'தத்வம் அஸி ஸ்வேதகேது' என ஞான தீக்ஷை அளித்தார், உத்தாலக ஆருணிரிஷி. குதிரையின் முதுகில் ஒரு பக்கமிருந்து மறுபக்கம் கால் மாறும் ஒரு சிறு நேரத்திலேயே ஜனகருக்கு ஞானம் அளித்தார் யாக்ஞவல்கியர். த்ரயம்பகேஸ்வரத்தில், நிவிருத்தி நாதரை ஒரு வேங்கை துரத்தியபோது, அவர் மத்ஸ்யேந்த்ர நாதரின் சீடரான ஞானி ஞானநாதரின் குகைக்குள் புகுந்தார். வேங்கை மறைந்தது. ஞானநாதர் அவருக்கு ஞான தீக்ஷை அளித்தார்.

எனவே ஆன்ம போதனை எந்த இடத்திலிருந்தும் எந்தச் சமயத்திலும் வரலாம். அதைப் பெறுவதற்கு சாதகன் சதா விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும். பூரண ஆத்மானுபூதி பெற்ற மஹான் ஒருவர் சாதகனுக்கு எந்த மார்க்கத்திலும் தீக்ஷை அளிக்க முடியும். மனித உருவத்திலுள்ள மஹேஸ்வரனே பகவானாகிய ஸத்குரு. புறத் தோற்றத்தைக் கொண்டு அவரை மனிதன் என்று எண்ண வேண்டாம். தீவிர நம்பிக்கையுடன் பகவானை வழிபட்டு அவன் காட்டும் உபதேசப் பாதையில் சென்றால் கண்மூடித் திறப்பதற்குள் ஆத்மானுபூதி கிடைக்கும் என்பது உறுதி.

அப்படியென்றால் எதனை நாம் எண்ணித் தியானிப்பது? பகவான் கூறுகிறார்:

குறுக்கொடுமேல் கீழிலுமே கூறுபடும் உள்ளும்
புறத்திலும் எங்கும் எப்போதும் – உறப்பெறும்
சூனியமாய்த் தானே சொலிக்கும் ஆன்மாவையே
மேனிதமும் பாவனைசெய் மேல்.

– (ஆன்மசாட்சாத்காரப் பிரகரணம் 29)

இன்றைய உலகில் Information technology முதலிடம் வகிக்கிறது. இதன் அடிப்படை, ஒரு விஷயத்தை மிகவும் சிறிய பகுதிகளாகப் பகுத்து அதன்

அடிப்படையை ஆராய்வதே. எத்தனைப் பகுதிகளாக ஒரு பொருளைப் பிரித்தாலும் அத்தனையிலும் உள்ளும் புறமும் மேலும் கீழும் எங்கேயும் எப்போதும் நிலையுற்றதாய், அனனியமாய் விளங்குவதே, அந்த ஆத்மா. அதனையே தியானம் என்பது. பகவான் இப்பாடலில் தரும் விளக்கம் எங்கும் நிறைந்திருந்தாலும் எதனாலும் பாதிக்கப் பெறாது, விஷயங்களற்ற சூனியமாய் விளங்குகிறது. இப்படி ஒளிர்கின்ற ஆத்மாவையே தினமும் சிந்திப்பாய் என்று கூறுகிறார். சிந்தனைக்கு அப்பாற்பட்ட பொருளாய் இருந்தாலும் அதனை விடாது சிந்திக்க, அதனை மறைத்துள்ள அகந்தை தேய்ந்து, அழிந்து ஆத்மா மட்டுமே பிரகாசிக்கும்.

‘இன்றுஎனக்கு அருளி இருள் கடிந்து உள்ளத்து
எழுகின்ற ஞாயிறே போன்று
நின்ற நின் தன்மை நினைப்பு அற நினைந்தேன்
நீ அலால் பிறிது மற்று இன்மை
சென்று சென்று அணுவாய், தேய்ந்து தேய்ந்து ஒன்று
ஆம்
திருப்பெருந்துறை உறை சிவபெருமானே!
ஒன்றும் நீஅல்லை அன்றி ஒன்று இல்லை
யார்உன்னை அறியகில்லாரே’

என்று மணிவாசகர் பாடலுமே இதே கருத்தை வலியுறுத்துகின்றது.

மணிவாசகர் பாடும் இத்திருப்பெருந்துறை ஆத்ம நாதர் கோயிலில், கருவறையில் சிவலிங்க சிலையே ஒன்றுமே இல்லை. அக்கோயிலில் தெய்வத்தை ஒரு குறிப்பட்ட இடத்தில் பார்க்க முடியாது. அவர் எல்லாவிடத்திலும் உள்ளார். இதனால் அந்த ஆத்மா நாம் மேலே கண்ட ஆத்ம சாட்சாத்கார பிரகரணம் பாடலில் கூறுவதுபோல், மேலும், கீழும், குறுக்கும், நெடுக்கும் எங்கும் பரவி நிறைந்துள்ளது.

யூத மதத்தின் கடவுள் பெயர் 'யாவே' அல்லது 'யஹுவா' என்பதாகும். இது ஒரு பெயர் இல்லை. இது ஓர் அடையாளம். இதன் பொருள் 'பெயரில்லாதது' என்பதாகும். இந்தப் பெயரற்ற பெயரை வருடத்திற்கு ஒரு முறை சாலமன் ஆலயத்தில் தலைமை ராபி மட்டுமே கூறுவார். ஏனெனில் தலைமை குரு எல்லையற்ற நிலையில் ஆத்ம ஞானம் அடைந்தவர். எனவே, அவர் மட்டுமே எல்லையற்ற அப்பரம்பொருளின் பெயரைக் கூற அனுமதிக்கப்பட்டவர். மனமே அழிந்த நிலையில் அவர் 'யஹுவா' என்ற இறை நாமத்தை உச்சரிப்பார்.

ஒரு சமயம் புத்தர் முழு மோனத்தில் ஆழ்ந்திருந்தார். அவர் அருகே அவரது சீடர் ஆனந்தர் அமர்ந்து இருந்தார். அப்பொழுது, கற்றறிந்த பிராமணர் ஒருவர் தம் சீடர்கள் சூழ புத்தரிடம் வந்து, 'ததாகதரே! பரம்பொருள் பற்றி ஏதாவது கூறுங்களேன்' என்று வேண்டினார். புத்தர் அவரைக் கண் திறந்து நோக்கிவிட்டு மீண்டும் கண்களை மூடிக் கொண்டார். சற்று நேரம் காத்திருந்த பிராமணர், புத்தரை வணங்கிவிட்டுச் சென்றுவிட்டார்.

அந்தப் பிராமணர் சென்றவுடன், ஏமாற்றம் அடைந்த ஆனந்தர் புத்தரைப் பார்த்துக் கேட்டார், 'பகவானே நீங்கள் ஒரு நல்ல சந்தர்ப்பத்தை இழந்து விட்டீர்கள். இப்போது வந்த பிராமணருக்கு ஆயிரக்கணக்கான சீடர்கள் உள்ளனர். இவர் மட்டும் நம்மிடம் வந்து சேர்ந்து இருந்தால், உங்களைப் பின்பற்றினால், அனேகர் நம்மிடம் வந்து சேர்ந்து இருப்பார்கள். நீங்கள் அவருக்கு பதிலளிக்காமலேயே இருந்து விட்டீர்களே!'

புத்தர் கூறினார், "ஒரு நல்ல குதிரைக்கு சாட்டையின் நிழலே போதும். அதைச் சாட்டையால் அடிக்க வேண்டும் என்பதில்லை. அவர் மனமாற்றம் அடைந்து விட்டார்."

ஆனந்தர் இந்தப் பதிலால் திருப்து அடையவில்லை. மறுநாள் காலை ஓர் ஆச்சர்யம் காத்திருந்தது. அந்தப்

*பிராமணர் தன் ஆயிரக்கணக்கான சீடர்களுடன் வந்து கொண்டிருந்தார். வந்த அனைவரும் புத்தர் பாதங்களை பணிந்து, மடாலயத்தில் சேர்ந்தனர்.*

*ஆனந்தருக்குத் தன் கண்களையே நம்ப முடியவில்லை. இரவு புத்தரிடம் ஆனந்தர் கேட்டார்: 'நீங்கள் எப்படி இந்த அற்புதத்தைச் சாதித்தீர்கள்! அவர் கேட்ட கேள்விக்கு நீங்கள் பதில் சொல்லவில்லை. நீங்கள் கண்ணை மூடிக் கொண்டு இருந்தீர்கள். அவர் அவமதிக்கப்பட்டதான நினைத்துப் போய் விட்டார் என நினைத்தேன். ஆனால், அவர் தமது சீடர்களுடன் வந்து உங்களிடம் சரண் அடைந்துவிட்டாரே!'*

*புத்தர் பதிலிறுத்தார், "அவருக்கு நான் மௌனமாய் அளித்தது ஒரு சூட்சுமமான பதில். அவர் ஒரு பேரறிஞர். பரம்பொருளைப் பற்றி நான் விளக்க முற்பட்டிருந்தால் அவர் திரும்ப வராமல் போயிருப்பார். ஏனெனில், பரம் பொருளை வார்த்தைகளால் விவரிக்க முடியாது என்பது அவருக்குத் தெரியும். எனவேதான் நான் கண்மூடி மௌனமாய் இருந்தேன். மௌனமே பதில், சுத்த மௌனமே பரம்பொருள். ஒரு நல்ல குதிரைக்கு சாட்டையின் நிழலே போதுமானது. அதைச் சாட்டையால் அடிக்கத் தேவையில்லை."*

பகவான் ஒரு சிவராத்திரியன்று, சிவபெருமான் சனகாதி நால்வருக்குக் கூறிய உபதேசம் என்னவென்று கேட்ட அன்பர் கேள்விக்கு பதில் கூறுமுகமாக இரவு முழுதும் சுத்த மௌனத்திலேயே இருந்து, அன்பர்கட்கு விளங்க வைத்தார் என்பதை முன்னரே கண்டிருக்கிறோம். பகவான், 'கைவல்ய சித்தி' என்பதை விளக்குமிடத்து, அத்வைத பாவனையை மேற்கொண்டு, அதன்மூலம், 'அகந்தையை அழித்து, அதன்மூலம் மௌனத்தில் மீண்டும் உயிர்த்து எழுதலே' என்கிறார்.

**'அத்துவித மெய்யாம் அபரிமித மோனத்தில்**
**செத்து உயிர்த்தல் கைவல்ய சத்தியாக - வித்தகமாம்**



அந்நிலையில் மேவும் அதீத சுத்தானந்தம்
தன்னிலையில் மன்னும் தழைத்து.'

– (குருவாசகக் கோவை 366)

அங்ஙனம் ஜீவபோதம் முற்றும் மாண்டு, சிவபோதம் தழைப்பதே அத்வைத மெய்ஞானம். அதுவே நம் உண்மை இயல்பு. இதையே பகவான் தன்னியல்பில் மன்னுதல் என்று குறிப்பிடுகிறார். இதையே 'மரித்து எழுதல்' என்று ஏசுநாதர் குறிப்பிடுகிறார்.

இதற்கு ஒரே வழி குருபாதத்தில் மனம் படிதலே. அப்போது மனம் பழைய வழிகளில் செல்லாது.

'ஆதித்தனைப் போல் அபரிமித ஞானகுரு
பாதத்து ஒளியில் படிந்த மனம் - போத
சொரூபத்தில் கற்பிதமாய் தோன்றல் உறும்பேதத்
திரயத்தில் சேர்தல் இலை.'

(குருவாசகக் கோவை 288)

கருத்துப் பரிமாறலைத் தொடர்வோம்.

பகவான் பணியில் தங்கள்

ராம்மோஹன்

# பஜ கோவிந்தம்

**டாக்டர் சுதா சேஷய்யன், ஜி. ஸ்ரீகாந்த்**

## *நிலையற்ற வாழ்க்கை*

*கல்வி, தனம், காமம் – இம் மூன்றின் உண்மைத் தன்மைகளைத் தம்முடைய மோஹ முத்கரத்தின் முதல் மூன்று ஸ்லோகங்களின் மூலம் எடுத்துரைத்த ஆசார்யர், நான்காவது ஸ்லோகத்தில் வாழ்க்கை எத்தனை நிலையற்றது என்பதைக் கூறுகிறார்.*

*நளினீ தள கத ஜலம் அதிதரளம்*
*தத்வத் ஜீவிதம் அதிசய சபலம்*
*வித்தி வ்யாத்யபிமான கரஸ்தம்*
*லோகம் ஷோகஹதம் ச ஸமஸ்தம்*

*'தாமரை இலையில் உள்ள நீர்த்துளியானது நிலையில்லாமல் எந்நேரமும் அலைந்து ஆடிக் கொண்டே இருக்கும். அது போன்று மனித வாழ்க்கையும் அநித்யமானது. துன்பமானது இந்த உலகம் நோயாலும் அபிமானத்தாலும் பீடிக்கப்பட்டுள்ளது என்பதை உணர்ந்து கொள்' என்ற அறிவுரையை இந்த ஸ்லோகத்தின் மூலம் ஆசார்யர் நம்முடைய நினைவில் நிறுத்துகிறார்.*

*வாழ்க்கை என்பது இன்ப-துன்பங்களின் சுழற்சி. நோயால் துன்புறும் உடலும், அஹங்காரம், தற்பெருமை போன்ற தீய பண்புகளினால் துன்புறும் மனமும் வைராக்கியத்தை வளர்த்துக் கொள்வதன் மூலம் ஆனந்தம் அடைய முடியும். மனிதன் தன்னுடைய உண்மையான நிலையை உணர்வதால் மட்டுமே*

துன்பங்களிலிருந்து விடுபெற்று எல்லையில்லா ஆனந்தத்திற்கு அதிபதியாக முடியும்.

இங்கு ஆசார்யர் அளித்திருக்கும் உவமையில் மிக ஆழமான வேதாந்தக் கருத்தும் புதைந்து கிடக்கிறது. நீரிலே பிறந்து, வளர்ந்து, வாழ்ந்த தாமரை, அதே தண்ணீரில் உயிரைத் துறக்கிறது. அதேபோன்று ஆத்ம தத்துவத்திலிருந்து தோன்றும் மனித வாழ்வும். அதிலே திளைத்திருந்து இறுதியில் ஆத்ம தத்துவத்தில் இரண்டறக் கலந்திட வேண்டும்.

ஜீவன்களின்மேல் உள்ள காருண்யத்தால் பரமாத்மா சிருஷ்டியைத் தொடங்குகிறார். மனிதனாகப் பிறப்பதுதான் தெய்வீகத்தை உணர்வதற்கான வழி. சிருஷ்டியைத் தொடங்கும் பரமாத்மா நம்மை அவருடைய உருவாகவே படைக்கிறார். பரமாத்மா வுக்கும் ஜீவாத்மாவுக்கும் பேதம் கிடையாது என்பது வேதவாக்கு. அந்தக்கரணங்களான மனம், புத்தி, அஹங்காரம், சித்தம் என்பவைதாம் மனித வாழ்க்கையின் ஆதாரமாக அமைகின்றன. இதில் சித், அதாவது சைதன்யமாக உறைவது பரமாத்மாதான் என்று உணர்ந்தால், இந்த ஜீவனானது அந்தப் பரமனோடு ஐக்கியமடையும். இதைக் காட்டக்கூடிய உவமையை ஆசார்யர் இந்த ஸ்லோகத்தில் எடுத்துரைக்கிறார்.

குளத்தில் உள்ள நீர் பரமாத்மாவைக் குறிக்கும். அந்தப் பரமன் தன்னை ஒரு சிறிய நீர்த்துளியாக மாற்றிக் கொண்டு இந்த ஜீவனுக்குள் சைதன்ய ஸ்வரூபமாக வாசம் செய்கிறார். தானும் பரமனுடைய துளி என்று உணரும் ஜீவன் அந்தப் பரமனோடு கலந்து விடுகிறது. இந்த ஐக்கிய நிலைதான், வேதத்தில் 'தத் த்வமஸி' என்று கூறப் பெற்றுள்ளது. அதுவும் இதுவும் ஒன்று என்ற நிலை -- அந்தப் பரமனும் இந்த ஜீவனும் தனித் தனி அல்ல என்பதைத் தெளிவுற உணர்வதுதான் 'தத் த்வமஸி'.

இந்தக் கருத்தைத் தெளிவாக நினைவுக்குக் கொண்டு வரும் மஹாகவி பாரதியின் பாட்டை இங்கு நினைவுகூர்தல் நலம்.

“அக்னிக் குஞ்சொன்று கண்டேன்
அதை ஆங்கொரு காட்டிலோர் பொந்திடை வைத்தேன்
வெந்து தணிந்தது காடு
தழல் வீரத்தில் குஞ்சென்றும் மூப்பென்றுமுண்டோ
தத்தரிகிட தத்தரிகிட தித்தோம்
தக தத்தரிகிட தத்தரிகிட தித்தோம்”

‘ஒரு சிறிய நெருப்புப் பொறி. அதை வைக்க இடம் தெரியாமல் மிகவும் எட்டி இருக்கும் காட்டிலுள்ள மரத்தின் பொந்தில் வைத்தேன். என்ன ஆச்சரியம், சிறிது நேரத்திற்கெல்லாம் அந்தக் காடே தழல் விட்டு எரிந்தது’ என்று பாடுகிறார்.

இந்த ஜீவன் தன்னுடைய உண்மையான ஸ்வரூபத்தை உணர்வதன் பொருட்டே, பெரியதிலும் பெரியதான பரம்பொருள் தன்னையே குறுக்கிக் கொண்டு மனித உடலுள் சைதன்யமாக வந்துறைகிறது. ஜீவனும் பரமனும் வெவ்வேறல்ல என்ற உணர்வை அடைந்துவிட்டபின், எல்லையில்லாக் கடலான பரமாத்மாவோடு இரண்டறக் கலந்தபின், பெரியது சிறியது என்ற பேதம் எங்கே? பேதங்கள் நீங்கிய நிலையில் உள்ளத்தில் பொங்கும் மகிழ்ச்சியே தத்தரிகிட தத்தரிகிட தித்தோம் என்ற ஆனந்த நடனமாகப் பரிமளிக்கிறது.

ஆனால் தன்னுடைய உண்மை நிலையை உணராத மனிதனோ நோய்வாய்ப்பட்டு, பிறப்பு-இறப்பு என்ற சுழற்சியில் உழல்கிறான். இங்கும் அங்கும் புரண்டு, ஆட்டம் கண்ட நீர்த்துளிக்கோ வாழ்க்கை துன்பமயமாகவே தோன்றும். செல்வம், புகழ், இளமை உள்ளவரை இன்பத்திலும் அதன் விளைவால் எழுந்த ஆணவத்திலும் மிதந்து கொண்டிருக்கும் மனிதன் இவையனைத்தையும் இழந்து படும்பாடுதான் என்ன!

அடுத்த ஸ்லோகத்தில் ஆசார்யர் அதையும் நிதர்சனமாக்குகிறார்.

## பணம் பத்தும் செய்யும்

பணம், பதவி, அந்தஸ்து - இவையனைத்தையும் இழந்த அவல நிலையை ஆசார்யர் இந்த ஸ்லோகத்தின் மூலம் உணர்த்துகிறார்.

யாவத் வித்வ உபார்ஜன ஸக்த:
தாவத் நிஜ பரிவாரோ ரக்த:
பஸ்சாத் ஜீவதி ஜர்ஜர தேஹே
வார்த்தாம் கோபி ந ப்ருச்சதி கேஹே

பணம் சம்பாதிக்கும் ஆற்றல் உள்ளவரைதான் மனிதன் தன்னுடைய உற்றார் உறவினர்களால் மதிக்கப்படுகிறான். வயதாகி, மூப்பின் காரணமாகத் தளர்ச்சி அடைந்த மனிதனோ, மதிப்பு மரியாதை இழந்து பேச்சுத் துணைக்குக்கூட ஆளில்லாமல் தவிக்கும் அவல நிலையை அடைவது திண்ணம் என்ற கருத்து ஆசார்யரால் இந்த ஸ்லோகத்தில் நயம்பட எடுத்துரைக்கப் பெற்றிருக்கிறது.

இந்த உலகத்தில் பணம், புகழ், அந்தஸ்து உள்ள மனிதனுக்கே மதிப்பும் மரியாதையும் கிட்டுகிறது. இதன் பின்விளைவு என்ன? இவற்றை இழந்த மனிதன் மிக அவலமான நிலைக்கு ஆளாக வேண்டும் என்ற கட்டாயம் உண்டாகிறது. இத்தகைய தாற்காலிகமான இன்பங்களையும் அவற்றைத் தொடரும் துன்பங்களையும் விட்டு, இறைவனின் திருவடியில் சரணடைந்தால் நிலையான, அழிவில்லாத ஆனந்தத்தை அடையலாம் என்பதுதான் ஆசார்யரின் உபதேசம்.

இதே கருத்தைக் கொண்டிருக்கும் பாபநாசம் சிவனாரின் பாடல் வரிகள் மிக அற்புதமானவை.

“மனமே கணமும் மறவாதே ஜகதீசன் மலர்ப்பதமே
மோகம் மூழ்கிப் பாழாகாதே மாயவாழ்வு சதமாய்...

*நாதன்நாமம் நீ பஜி இன்றே, நாளை என்றால் யாரதைக் கண்டார்*

*ஆதலால் அவரோகமொழிந்திடவே...*

*நடையும் தளர தேகமொடுங்க நாவது குழறக் கண்கள் மங்க*

*என்ன செய்வாய் துணை யார் வருவாரின்று..."*

நரை, திரை, மூப்பு, பிணி என்ற நான்கையும் யாரொருவரும் தவிர்க்க இயலாது. பிணியாலும் மூப்பினாலும் அவதிப்படும் மனிதனுக்கு, ஈசனின் மலர்ப்பதம் ஒன்றுதான் துணை என்பதைத் தெளிவாகப் பாபநாசம் சிவன் கூறியிருக்கிறார். இறைவனின் நாமத்தைக் கூறுவதன் மூலம்தான் அவருடைய மலர்ப்பதத்தை அடைய முடியும் என்று சொல்லும் கவிஞர், அதை நாளை என்று ஒத்தி வைக்காமல் இன்றே செய் என்றுரைப்பது, மனித மனத்தின் தன்மையை அவர் உணர்ந்ததற்கான சிறந்த எடுத்துக்காட்டாக விளங்குகிறது. நாளை செய்யலாம் என்று தள்ளிப் போடுவது மனத்தின் இயல்பு. ஆனால் நாளைவரை நாம் உயிருடன் இருப்போம் என்ற உத்திரவாதம் கிடையாது. அதனால் 'நன்றே செய், அதையும் இன்றே செய்' என்ற கொள்கைக்கேற்ப நாதன் நாமத்தை இன்றே சொல்ல வேண்டும் என்பது கவிஞரின் வாக்கு.

ரத்னாகரன் என்ற திருடன் வழிப்பறி செய்து தன்னுடைய குடும்பத்தைக் காப்பாற்றி வந்தான். ஒருநாள் அந்த வழியில் சென்று கொண்டிருந்த நாரத மகரிஷியை மறித்தான். அவரிடமுள்ள பொருட்களைக் கொள்ளையடிக்க முயன்றான். அஞ்சாத நாரதரோ அவன் திருடுவதற்கான நோக்கத்தை வினவ, தன்னுடைய மனைவி மக்களைக் காப்பாற்றவே அந்தத் தொழிலில் ஈடுபட்டுள்ளதாக ரத்னாகரன் கூறினான். 'நீ சம்பாதிக்கும் செல்வத்தை அனுபவிக்கும் உன்னுடைய மனைவி, குழந்தைகள் அதன் விளைவாக வரும் பாவத்தில் பங்கு கொள்வார்களா?'


வால்மீகி

என்ற நாரதரின் கேள்விக்குப் பதில் அறிந்து கொள்ள ரத்னாகரன் தன்னுடைய மனைவி, மக்களிடம் சென்றான். 'எங்களைப் பார்த்துப் பராமரிப்பது உங்கள் கடமை; அதற்காக நாங்கள் ஏன் உங்களுடைய பாவத்தை ஏற்க வேண்டும்?' என்ற மனைவி, மக்களின் கேள்வி அவனுடைய அகக் கண்ணைத் திறந்தது. எவ்வளவு நெருக்கமான உறவானாலும் அது பணமும் பதவியும் இருக்கும் வரைதான் என்பதைத் தெளிவுற உணர்ந்த ரத்னாகரன், அந்தமில்லா ஆனந்தத்தைப் பெற இறைவனின் நாமத்தை நாட.... மரா மரா என்ற சொல் மெல்ல மெல்ல ராம ராம என்று உருவெடுத்து அவனுடைய உதட்டிலும் உள்ளத்திலும் எதிரொலிக்க.... ரத்னாகரன் என்ற திருடன் மறைந்து வால்மீகி என்ற ஆதிகவி உருவானார். தன்னைச் சுற்றிக் கரையான் புற்று எழுந்ததுகூடத் தெரியாமல் ராம நாமத்தில் திளைத்திருந்தார். வன்மீகம் என்பது கரையான் புற்றுக்கான சொல். வன்மீகத்திலிருந்து எழுந்ததால் வால்மீகி என்ற பெயரைக் கொண்டார்; ராம சரித்திரத்தை எழுதக்கூடிய அளவுக்கு உயர்ந்தார்.

மனைவி மக்களின் அன்பு, தன் பணத்தின் மீதுதான் என்றுணர்ந்தார்; நிலையற்ற அன்பைத் துறந்தார்; நாம ஜபத்தின் மூலம் இறைவனின் இணையில்லா அன்பைப் பெற்றார். ஆசார்யரின் இந்த ஸ்லோகத்திற்கு ஆதிகவியை விட சிறந்த எடுத்துக்காட்டு இருக்க முடியுமா!

'வித்தம்' என்ற சொல் பணத்தை மட்டும் குறிக்கவில்லை. பணம், பொருள், புகழ், அந்தஸ்து என்பதோடு மனிதனிடம் இருக்கும் அத்துணை

*ஆற்றல்களும் இந்தச் சொல்லுள் அடங்கும். ஒரு மனிதனிடம் உள்ள ஆற்றல்களைக் கண்டு மதிமயங்கும் எத்தனையோ பேர் ஆற்றலிழந்த அதே மனிதனைத் துச்சமாக மதிப்பதை நாம் கண்கூடாகப் பார்த்திருக்கிறோமல்லவா!*

*மாபெரும் வீரர்கள் ஐவரைத் தன்னுடைய கணவன்மார்களாகக் கொண்ட பெண், பெரியோர்கள் நிறைந்த அரச சபையில் துகிலுரியப்பட்டாள். சபையில் இருந்த கணவன்மார்கள் செயலற்றிருந்த நிலை; மன்னனையும் மற்ற பெரியோர்களையும் உதவி செய்யுமாறு கெஞ்சினாள், கதறினாள்; யாரும் உதவிக்கரம் நீட்டாத நிலையில்... பரமனை நோக்கிப் பணிந்தாள்; கண்ணனால் காப்பாற்றப்பட்டாள் காரிகையான திரௌபதி.*

*வீரமே உருவான பாண்டவர்கள் விதியின் வசப்பட்டு தங்களுடைய மனைவியின் மானத்தைக் காப்பாற்ற முடியாமல் தவித்தார்கள். கண்ணனின் அனுக்ரஹமே திரௌபதியைக் காப்பாற்றியது.*

*விதியின் சீற்றத்தால் மனிதன் எதையும் இழக்க நேரிடும் என்பது மறுக்க முடியாத உண்மை. அவனுக்குத் துணையாய் நின்ற அனைவரும் விட்டுவிட்டாலும், இறைவன் என்றும் துணை நிற்பார் என்பதை உணர்த்துவதாக ஆசார்யர் அருளிய இந்த ஸ்லோகம் அமைந்திருக்கிறது.*

*(தொடரும்)*

# ஸ்ரீ அருணாசல ரமண தர்ஸனம்

**டாக்டர் எஸ். ராமகிருஷ்ணன்,**

**சங்கர நேத்ராலயா, சென்னை**

*ஸ்ரீமத் பாகவதத்தில், பிரும்ம தேவன், கிருஷ்ணரின் உண்மையான ஸ்வரூபத்தைச் சொல்வதற்கும், பகவான் ஸ்ரீரமண மகரிஷி, அருணாசல மலையின் உண்மையான தன்மையைச் சொல்வதற்கும் ஓர் ஆச்சர்யமான ஒற்றுமை காணப்படுகிறது. பிரம்ம தேவன், கண்ணனை, "பூர்ணம், பிரும்ம சனாதனம்", என்கிறார். பகவான் ரமணர் அருணகிரியை, "சத்தாகவும் சித்தாகவும் விளங்கும் பரம்பொருள்" என்கிறார். ஆகவே, பரம்பொருள்தான் கிருஷ்ணர்; பரம்பொருள்தான் அருணாசல மலை. இவ்வுண்மையை விஸ்தாரமாக அனுபவிப்போம்.*

*கண்ணன், கம்ஸனின் தர்பார் அரங்கத்தில் நுழைகிறான். சுமார் 10 வயது பாலகன். அங்குக் கூடியிருக்கும் ஒவ்வொரு சாராரும் அவனை எப்படிக் காண்கிறார்கள் என ஸ்ரீமத் பாகவதம் விளக்குகிறது.*

*மல்லர்கட்கு கண்ணன் பயங்கர இடியும் மின்னலுமாக;*
*பாமரர்கட்கு உயர்ந்த மனிதனாக;*
*பெண்களுக்கு அழகு மன்மதன் போல;*
*கோபச் சிறுவர்கட்கு தங்களைப்போன்ற ஒரு சிறுவனாக;*
*சிற்றரசர்களுக்கு தங்களை நடுங்க வைக்கும்*
*சக்ரவர்த்தியாக;*
*தாய் தந்தை, தேவகி வஸுதேவர்கட்கு பால்வடியும்*
*சிறு குழந்தையாக;*

கம்ஸனுக்கு யமனாக;
அறிவிலிகளுக்கு மலைபோன்ற விஸ்வரூபனாக;
விருஷ்ணிகளுக்கு குலதெய்வம் போல;
யோகிகளுக்கு பரம்பொருளாக

ஒரே சமயத்தில் காட்சி அளிக்கிறான். ஒவ்வொரு தோற்றத்திலும், அதன் இயற்கை ரஸமும் வெளிப்படுகிறது. உதாரணமாக, தேவகி-வஸுதேவர் பார்க்கும்போது வாத்ஸல்ய ரஸம், பெண்கள் பார்க்கும்போது சிருங்கார ரஸம், கம்ஸன், யமனாகப் பார்க்கும்போது பயம் முதலியன.

இப்படி, ஒரே சமயத்தில் பலருக்குப் பலவாறு காட்சி தரும் கிருஷ்ணனின் உண்மையான ஸ்வரூபம் யாது?

எல்லோருக்கும் பாட்டனார் (பிதாமஹர்) என்று பட்டம் பெற்ற பிரும்ம தேவன் "பிரும்ம மோஹனம்" என்னும் கண்ணனின் லீலையை அனுபவித்த பின்னர் "கண்ணன் யார்?" என்ற தன் தீர்ப்பைப் பதிவு செய்கிறார். பிதாமஹர் தீர்ப்புக்கு மேல் முறையீடு எது?

"கண்ணன் யார் தெரியுமா? அவன்தான் பூரண பிரும்மம். இன்று நேற்றல்ல; அனாதிகாலமாக. நந்தகோபர், கோபச் சிறுவர்கள் ஆகிய விரஜைவாசிகளின் பாக்கியமே, அவன் அவர்களின் உறவினனாகவோ, நண்பனாகவோ வாழ்ந்து கொண்டிருக்கிறான். ஆனந்த ஸ்வரூபன்."

*அஹோபாக்கியம் அஹோபாக்கியம்*
*நந்தகோப விரஜௌகஸாம்*
*யன்மித்ரம் பரமானந்தம்*
*பூர்ணம் பிரும்ம சனாதனம்.*

– (ஸ்ரீமத் பாகவதம், ஸ்கந்தம் 10, அத்தியாயம் 14, சுலோகம் 32)

யோகிகளும் கண்ணனை பரமாத்மாவாகவே உணர்ந்தார்கள்.

*இப்பொழுது அருணகிரிக்கு வருவோம். அருணாசல மலையைப் பார்ப்பவர்கள் பல கோடி; வலம் வருபவர்கள் பல லட்சங்கள். ஒவ்வொருவருக்கும் ஒவ்வொரு விதமாக அருணகிரி காட்சி அளிக்கிறது. சிலருக்கு, மணல், கற்கள், பாறைகள் உள்ள குன்றாக; சிலருக்கு கவர்ச்சியான இயற்கைக் காட்சிகள் நிரம்பிய அழகிய மலையாக; இன்னும் சிலருக்கு காடுகள், வன விலங்குகள் விதவிதமான பூச்சிகள், பிராணிகள் விஷ ஜந்துக்கள், சிறு கால்வாய்கள், குட்டைகள் உள்ள இடமாக இப்படி இப்படி. ஆனால் அருணகிரியின் உண்மையான ஸ்வரூபத்தை முதற்கண் கண்டு, அனுபவித்து, "யான் பெற்ற இன்பம் பெருக இவ்வையகம்" என்ற கொள்கைப்படி தன் ஆனந்தானுபவத்தைப் பிறருடன் பகிர்ந்து கொண்டது நம் ரமண மகரிஷியே. அதாவது, அருணகிரியும் பூர்ணம், பிரும்ம சனாதனம். கண்ணனும் அருணாசலமும் ஒரே வஸ்துவாகிய பரபிரும்மமே. ஞானக் கண்ணால் பார்ப்போருக்கு அந்த ஆனந்தானுபவம் ஏற்படும்.*

*"திருஷ்டிம் ஞானமயீம் க்ருத்வா,*
*பஸ்யேத் பிரும்மமயம் ஜகத்"*

*ஸ்ரீரமண பகவான் இத் தத்துவத்தைப் பல பாட்டுக்களில் அருளிச் செய்திருப்பதை இப்போது நாம் அனுபவிப்போம்.*

*இதோ ஸ்ரீ அருணாசல பதிகம் 9 வது பாட்டில் மூன்று தடவைகள் "பரம" என்கிறார்.*

*பரமநின் பாதம் பற்றறப் பற்றும்*
*பரவறி வறியரிற் பரமன்*
*பரமுனக் கெனவென் பணியறப் பணியாய்*
*பரித்திடு முனக்கெது பாரம்*
*பரமநிற் பிரிந்திவ் வுலகினைத் தலையிற்*
*பற்றியான் பெற்றது போதும்*



பரமனா மருணா சலவெனை யினியுன்
பதத்தினின் றொதுக்குறப் பாரேல்

பரம்பொருளாகிய அருணாசலனே என்று முடிக்கிறார்.

ஸ்ரீ அருணாசல பதிகம் பாடல் 11 ல்

"கிரியிது பரமாக் கருதிய வென்போற்
கெட்டவ ரெத்தனை கொல்லோ"

மலையுருவாகிய இந்த அருணாசலத்தை பரம் பொருளாகவே நினைத்து என்னைப் போன்று அகங்காரம் அழியப் பெற்றவர்கள் எத்தனை பேர்களோ!

ஸ்ரீஅருணாசல பதிகம் பாடல் 6 ல்

"தற்பர நாளுந் தாளினிற் றங்கித்
தண்டலர் மண்டுக மானேன்
சிற்பத நற்றே னுண்மல ரளியாச்
செய்திடி லுய்தியுண் டுன்ற
னற்பதப் போதி னானுயிர் விட்டா
னட்டதூ ணாகுமுன் பழியே
வெற்புரு வருண விரிகதி ரொளியே
விண்ணினு நுண்ணருள் வெளியே"

*பரம்பொருளே! சுயம் பிரகாசனே பல நாட்களாக உன் திருவடித் தாமரைகளில் தங்கி இருந்தும்...*

*மலை வடிவமான சிவந்து விரிந்த கிரணங்களையுடைய தேஜோமயனே.*

*ஆகாயத்தைக் காட்டிலும் அதி நுட்பமான அருள் வெளியாகிய சிதாகாசமே.*

*ஸ்ரீஅருணாசல அஷ்டகம், பாடல் 4ல்*

*"இருந்து ஒளிர் உனை விடுத்து"*

*எங்கும் சத்தாகவும், சித்தாகவும் இருந்து விளங்கிக் கொண்டிருக்கும் பரம் பொருளாகிய உன்னை விட்டு விட்டு*

*"இருந்தொளிர் உனை"*

*சத்சித் பிரகாசமாகிய உனது உண்மையை*

*"இணையறும் அருண மாமலை எனும்"*

*இணையற்ற மாமலையாகிய அருணாசலம் எனப்படும்*

*"மணியே" சுயம் பிரகாசனே.*

*ஸ்ரீ அருணாசல நவமணி மாலை, பாடல் 5*

*"சீரான சோணகிரி சிறக்க வாழும் சிற் சொரூபனாம் இறையே"*

*சீரும் சிறப்புமாக ஒளிரும் அருணாசலமாக புகழுடன் சிறந்து விளங்கி நிற்கின்ற ஞான வடிவமாகிய சிற் சொரூபனாகிய இறைவனே.*

*ஸ்ரீ அருணாசல பஞ்சரத்னம், பாடல் 1*

*"அருள் நிறைவான வமுதக்கடலே"*

*அருள் மயமாக எங்கும் நிறைந்து பொங்கும் அமுத சொரூபமான மாக்கடலே*

*"அருணகிரி பரமான்மாவே"*

*அருணாசல மென்னும் மலை வடிவமாக விளங்குகின்ற பரம் பொருளே!*

## *பரம்பொருள் இருக்குமிடம்*

*பரம்பொருளாகிய கண்ணன், அதே பரம்பொருளாகிய அருணமாமலை இருக்குமிடம் எது? சத்தாகவும் சின்மய மாகவும் ஒளிவிடும் பரம்பொருள் அங்கேயோ, இங்கேயோ, எங்கேயோ மட்டும் இல்லாமல் எங்கும் நீக்கமற நிறைந்துள்ளது. அனைவரது ஆத்மாவும் பரம்பொருளே.*

*"அந்தர் பஹிச்ச தத் சர்வம் வ்யாப்ய நாராயண ஸ்தித:*

*நாராயணன் எனும் பரம்பொருள் உள்ளேயும் வெளியேயும் எல்லா இடத்தையும் வியாபித்துக் கொண்டிருக்கிறான். (நாராயண சூக்தம்)*

*"கிருஷ்ணமேனம் அவேஹி த்வம் ஆத்மானாம் அகிலாத்மானாம்"*

*– (ஶ்ரீமத் பாகவதம், ஸ்கந்தம் 10, அத்தியாயம் 14, சுலோ. 55)*

*அதே பிரும்மதேவன் சொல்கிறார், கிருஷ்ணன் அனைத்து ஜீவராசிகளுடையவும் ஆத்மா என்று.*

*"அஹம் ஆத்மா குடாகேச சர்வபூதா சயஸ்தித:"*

*– (ஶ்ரீமத் பகவத் கீதை, அத்தியாயம் 10, சுலோ. 20)*

*கண்ணன் பகவத்கீதையில் சொல்வது அர்ஜுனா! எல்லா ஜீவராசிகளின் உடலுக்கும் உறையும் ஆத்மா நானே".*

*கிருஷ்ணனும் அருணமாமலையும் ஒரே பரம்பொருள். ஒரே வஸ்து. ஆகவே கிருஷ்ணனைப் பற்றி மேற்குறிப்பிட்ட உண்மை அனைத்தும் அருண மாமலைக்கும் பொருந்தும். அருணகிரியாகிய பரம்பொருளும் எங்கும் நீக்கமற நிறைந்துள்ள தத்துவம்; அனைவரது ஆத்மாவும் அம்மலையின் ஆனந்த ஸ்வரூபமே. அதே, எல்லோருடைய இதயங்களிலும் பிரகாசித்துக் கொண்டிருக்கிறது. பகவான் ஶ்ரீ ரமண மகரிஷி அருளிச் செய்த இதைப் பற்றிய பாடல்களை அனுபவிப்போம்.*

*ஸ்ரீ அருணாசல பஞ்சரத்னம், தனி விருத்தம்*

*“அரியாதியி தரசீவர தகவாரிச குகையில்*

*லறிவாய்ரமி பரமாத்தும னருணாசல ரமணன்”*

பிரும்மா, விஷ்ணு முதலான சகல உயிர்களின் இதயத் தாமரை என்னும் குகையில் ஆத்ம சொரூபமாய் இன்ப நிலையில் மகிழ்ந்து கொண்டிருக்கும் பரமாத்மாவே, அருணாசல ரமணனாகும்.

*“நல பரன் ஆர்ந்திடு குகை ஆர்ந்து”*

எல்லா நலன்களுக்கும் இருப்பிடமான பரம்பொருள் நிலை பெற்று விளங்கும் இதயக் குகையை அடைந்து

*“நிசம் அறிவாயது வெளியாம்”*

அருணாசல ரமணனின் நிஜ சொரூபத்தை அறிவாய் அந்த சொரூபமானது சிதாகாசவெளியாம்.

*ஸ்ரீஅருணாசல அஷ்டகம், பாடல் 3*

*“என்னை யான் அறிவுற என் உருவேறு ஏது*

*இருந்தனை அருணவான் கிரியென இருந்தோய்.”*

இவ்வாறு எனது ஆத்மா சொரூபத்தை நான் விசாரித் தறியும்போது எனக்கென்று ஒரு தனி உருவம் வேறு எது இருக்கிறது. அருணாசலமென்னும் வான் புகழ் மலையாக விளங்கிக் கொண்டு என்றும் நீயே இருக்கிறாய்.

*ஸ்ரீ அருணாசல அஷ்டகம், பாடல் 5*

*“மணிகளிற் சரடென வுயிர்தொரு நானா*

*மதந்தொறு மொருவனா மருவினை நீதான்”*

பல மணிகளால் கோர்க்கப்பட்ட மாலையினுள் உள்ள ஒரே நூலைப் போல், ஒவ்வொரு உயிர்களிடத்தும் பலவிதமான மதங்களினுள்ளும் அருணாசலனாகிய நீயே ஒருவனாகவே இருந்து விளங்குகிறாய்.

*“அருண நல்ஒளி மலை”*

அருணாசலமென்னும் சிறந்த ஜோதி மலை.

*ஸ்ரீ அருணாசல பதிகம், பாடல் 7*

*வெளிவெளி தீநீர் மண்பல வுயிரா*
*விரிவுறு பூதபௌ திகங்கள்*
*வெளியொளி யுன்னை யன்றியின் றென்னின்*
*வேறுயா னாருளன் விமலா*
*வெளியதா யுளத்து வேறற விளங்கின்*
*வேறென வெளிவரு வேனார்*
*வெளிவரா யருணா சலவவன் றலையில்*
*விரிமலர்ப் பதத்தினை வைத்தே.*

எங்கும் விரிந்து தோன்றுகின்ற ஆகாயமும், காற்றும், நெருப்பும், தண்ணீரும், மண்ணும் ஆகிய ஐம்பூதங்களும், பற்பல விதமான அநேக ஜீவராசிகளும், பௌதிக தோற்றங்களும் சிதாகாசமாகிய உன்னைத் தவிர வேறொன்றும் இல்லை என்றால், உனக்கு வேறாக நான் ஒருவன் மட்டும் எவனாயிருக்க முடியும்? குற்றமற்றவனே! சிதாகாச சொரூபனாய் இதயத்தில் இரண்டற்று, அனன்னியமாக நான் என்று எழுகின்றேனே இந்த நான் யார்? அருணாசலனே! நீ வெளிப்பட்டு வருவாயாக!

## உண்மையான குரு அந்தராத்மாவான அருணாசலனே

ஒவ்வொருவருடைய உண்மையான குரு, அவரது அந்தராத்மாவே. ஆத்மாவாகிற குருவே ஆத்ம ஞானத்தை உணரச் செய்து ஆனந்தத்தை அனுபவிக்கச் செய்கிறார். ஸ்ரீமத் பாகவதத்தில் இது தெளிவாகக் காண்பிக்கப் பட்டிருக்கிறது. பகவான் ரமணரும், "நான் யார்?" நூலில் இதே கருத்தை வலியுறுத்துகிறார்.

*"ஆத்மனோ குரு ராத்மைவ புருஷஸ்ய விசேஷத:*
*யத் பிரத்யக்ஷ அனுமானா ப்யாம் ச்ரேயோ ஸௌ*
*அனுவிந்ததே"*

*– (ஸ்ரீமத் பாகவதம், ஸ்கந்தம் 11, ஸர்க்கம் 7, சுலோகம் 20)*

*"உத்தரேத் ஆத்மனா ஆத்மானாம்" (ஸ்ரீமத் பகவத் கீதை, அத்தியாயம் 6, சுலோ. 5)*

ஆத்மாவினால் ஆத்மாவை உயர்த்திக் கொள். தன்னைத் தன்னால் உயர்த்திக் கொள் என, வெளிகுரு கீதாசார்யன் அர்ஜுனன் வாயிலாக நமக்கு உபதேசிக்கிறான். ஆகவே, நம் அந்தராத்மாதான் நம் உண்மையான குரு. அருணகிரியே ஆத்மாவாகப் பிரகாசிப்பதால் அதுவே குருவாகிறது.

ஆத்மாவான உள் குருவைக் காட்டிக் கொடுக்கும் வெளி குரு.

உள்ளே பிரகாசிக்கும் குருவைக் காட்டிக் கொடுக்க வெளிகுரு தேவை. அவரது அவயாஜ கருணையால் தான் ஆத்ம போதம் ஏற்படும்.

## வெளிகுருவும் அருணகிரியே

பகவான் ஸ்ரீ ரமணர் அருணகிரியை வெளிகுருவாக வந்து தன்னை அருள் பாலிக்கும்படி கீழ்க்கண்டவாறு பிரார்த்திக்கிறார்.

அருணாசல அக்ஷரமணமாலை, பாடல் 19

"குற்றமுற் றறுத்தெனைக் குணமாய்ப் பணித்தாள்
குருவுரு வாயொளி ரருணாசலா"

"எனது குற்றமனைத்தையும் முற்றுமாக அழித்து என்னை குணவானாக நின் திருவடிக்கு ஆளாகப் பணித்து ஆண்டருள், மெய்ஞான குருமூர்த்தியாக விளங்கும் அருணாசலா! இப்பாட்டின் உள் அர்த்தம் அருணமா மலையே! வெளிகுருவாக வந்து, என் உள்ளே உறைந்து கொண்டிருக்கும் ஆத்ம குருவை உன் கருணையால் எனக்குக் காட்டு. அப்போதுதான் அவர் "அஹம் போதம்" எனும் என் ஸ்வரூபத்தை எனக்கு உணர்த்துவார்" என்பதே.

## சத்குரு கிடைப்பது தெய்வானுக்ரஹமே

நமக்கு ஒரு சத்குரு கிடைக்க வேண்டுமென்றால், அதற்கு தெய்வத்தின் அருள் இருந்தால்தான் கிட்டும்.

*விவேக சூடாமணியில் ஒரு சுலோகம்:*

*"துர்லபம் த்ரயமேவைதத் தேவானுக்ரஹ ஹேதுகம்*
*மனுஷ்யத்வம், முமுக்ஷுத்வம் மஹாபுருஷ ஸம்ஸ்ரய:"*
*– (விவேக சூடாமணி, சுலோகம் 3)*

*மஹா புருஷர்கள் அல்லது சத்குருக்களை நாடி அடைதல் அடைதற்கரிது. தெய்வத்தின் அருளால்தான் அடைய இயலும்.*

*ஆகவே அருணாசல குருவாம் சத்குரு கிடைக்க பகவான் ரமணர் தெய்வத்தைப் பிரார்த்திக்கிறார். அந்தத் தெய்வம் யார் தெரியுமா? அதுவும் அருணகிரியே.*

*மகரிஷியின் பாடல்கள் வருமாறு:*

*அருணாசல அக்ஷரமணமாலை, பாடல் 17*

*"கிரியுரு வாகிய கிருபைக் கடலே*
*கிருபைகூர்ந் தருளுவா யருணாசலா"*

*ஊனக் கண்ணுக்கு கடினமான கல் மலை வடிவமாகக் காணப்படினும், ஞானக் கண்ணுக்கு மிகவும் தயவுடைய கருணைக் கடலாக விளங்குபவனே! என்னைப் பரிவுடன் அனுக்ரஹித்து அருள் செய், அருணாசலா!*

*அருணாசல அக்ஷரமணமாலை, பாடல் 48*

*"தெய்வமென் றுன்னைச் சாரவே யென்னைச்*
*சேர வொழித்தா யருணாசலா"*

*என்னைக் காத்தருளும் ரக்ஷகனாகிய தெய்வம் என்று கருதி, இடைவிடாது உன்னையே நினைந்து சரணாகதியடைந்த என்னை, என் தேகாபிமான குணங்களுடன், வாசனைகள் முதலானவற்றை ஒருங்கே ஒழித்து விட்டாய் அருணாசலா!*

*ஸ்ரீ அருணாசல பதிகம், பாடல் 3*

*"இறையுனை நினையு மெண்ணமே நண்ணா*
*வெனையுன தருட்கயிற் றாலீர்த்*

*திறையுயி ரின்றிக் கொன்றிட நின்றா*
*யென்குறை யியற்றின னேழை*
*யிறையினிக் குறையென் குற்றுயி ராக்கி*
*யெனைவதைத் திடலெதற் கிங்ங*
*னிறைவனா மருணா சலவெண முடித்தே*
*யேகனா வாழிநீ டூழி"*

*இறைவனாகிய அருணாசலனே! கடவுளாகிய உன்னைத் தியானிக்கும் எண்ணமே கொள்ளாத என்னை, நீயே வலிய வந்து உனதருள் கயிற்றால் கட்டி இழுத்து வந்து...*

*ஸ்ரீ அருணாசல பதிகம், பாடல் 5*

*"தலைவநீ யென்னைக் களவினிற் கொணர்ந்துன்*
*றாளிலிந் நாள்வரை வைத்தாய்*
*தலைவநின் றன்மை யென்னவென் பார்க்குத்*
*தலைகுனி சிலையென வைத்தாய்*
*தலைவநான் வலைமான் றனைநிக ராதென்*
*றளர்வினுக் கழிவுநா டிடுவாய்*
*தலைவனா மருணா சலவுள மேதோ*
*தமியனார் தனையுணர் தற்கே"*

*தலைவனாகிய அருணாசலா! நீ என்னை யாருமறியாத படி கவர்ந்து கொண்டு வந்து, உனது செந்தாமரைத் திருவடிகளில் இன்று வரையில் வாழ்ந்திருக்கும்படி செய்து விட்டாய். தலைவனாம் அருணாசல! உனது உண்மையின் தன்மை; இறைவனே! நான் வலையில் சிக்கிய மானைப் போன்று துன்புறாது... எனது இறைவனாகிய அருணாசலா! உனது திரு உள்ளத்தின் விருப்பம் எதுவோ?*

*சுருங்கச் சொல்லின் அருணகிரி தெய்வம், அருணகிரி குருவாக செயல்பட்டு, அந்தர்யாமியான அருணகிரி ஆத்மாவை உணர்த்தி ஆத்மானுபவம் ஏற்படுத்தும். ஆக, இது ஓர் அற்புதமான சங்கிலித் தொடர். தெய்வம், குரு, ஆத்மா; மூன்றுமே அருணகிரியே. மூன்றும் ஒருவரே. இக்கருத்தை கீழ்க்கண்ட சுலோகத்தின் மூலம் அனுபவிக்கலாம்.*

"ஈஸ்வரோ குரு ராத்மேதி மூர்த்தி பேத விபாகினே
வ்யோமவத் வ்யாப்ய தேஹாய தக்ஷியாமூர்த்தயே நம:"

மௌனகுரு தக்ஷிணாமூர்த்தியே ஈஸ்வரனாகவும், குருவாகவும், அந்தராத்மாவாகவும் விளங்குகிறார்.

எங்கும் வியாபித்துக் கொண்டிருக்கிறார். அதாவது தக்ஷிணாமூர்த்தியேதான் ஈஸ்வரன், குரு.

– (ஸ்ரீமத் பாகவதம், ஸ்கந்தம் 11, அத்தியாயம் 2, சுலோ. 37)

மேற்கண்ட சுலோகத்தில் 2 வது பாதத்தை கீழ்க்கண்டவாறு மாற்றினால் மிகவும் பொருத்தமான இருக்கும்.

"ஈஸ்வரோ குரு ராத்மேதி மூர்த்தி பேதவிபாகினே
அருணாசலாய பூர்ணாய ரமணாய நமோ நம:"

*அர்த்தம்:*

ஈஸ்வரனாகவும் குருவாகவும், அந்தராத்மாவாகவும் ஆன அருணாசல ரமணனாகிய பூர்ண பிரும்மத்திற்கு நமஸ்காரம், நமஸ்காரம்.

நிர்குண பிரும்மம், நிர்குண சகுண பிரும்மமாகவும் சகுண பிரும்மமாகவும் பிரகாசித்தல்.

பரம்பொருள்தான் நிர்குண பிரும்மம், (அரு) என்று கூறப்படுகிறது. ஏனெனில் அதற்கு குணங்களோ, நாமரூபங்களோ கிடையாது. உருவமும் பெயரும் இல்லாததால், அருவமாயுள்ள நிர்குண பிரும்மம், பெரும்பாலான ஜீவிகளைத் தன்பால் ஈர்த்து ஆட்கொள்வது மிகவும் கடினம். மேலும் அதற்குச் செயல்களும் கிடையாது. ஆகவே செயல்களை ஆற்றவும் பக்தர்களைக் கவர்ந்து அருள் பாலிக்கவும் நிர்குண (அரு) பிரும்மம், மாயையுடன் சேர்ந்து ஈஸ்வரனாக அதாவது பிரபஞ்சத் தலைவனாக, நியாமகனாக, செயல்வீரனாகப் பிரகடனம் செய்து கொள்கிறது. அந்த ஈஸ்வரன் ஒருவனே. மாயாசக்தியுடன் சேர்ந்தமையால் குணங்கள் பொருந்தியவன். பக்தர்களின் பலதரப்பட்ட

*விருப்பங்களுக்கு இணங்க ஈஸ்வரன் பலரூபங்களில் வெவ்வேறு பெயர்களில் காட்சியளிக்கிறான். அவைதான் சிவலிங்கஸ்வரூபம், நடராஜர் போன்ற ஸ்வரூபமுள்ள சிவபெருமான், விநாயகர், முருகன், ஸ்ரீமந்நாராயணன், சக்தி முதலியன.*

## *நிர்குண-சகுண ரூபம் (அரு-உரு)*

*சிவலிங்க ஸ்வரூபம் நிர்குண-சகுண ரூபமாகும். ஏனெனில் அதற்கு கை, கால், கண், வாய், மூக்கு முதலிய அவயங்கள் இல்லாததால் ரூபம் இல்லை; நிர்குணம் என்று சொல்லலாம். ஆனால் ஒரு குறிப்பிட்ட வடிவம், நீள்வட்ட வடிவம் எல்லா லிங்கங்கட்கும் உண்டானதால் சகுணம்; ரூபம் உள்ளது எனலாம். இரண்டையும் சேர்த்து நிர்குண-சகுண ரூபம் சிவலிங்கத்திற்கு என்பர்.*

## *சகுண (அதாவது உருவமுள்ள) பிரும்மம்*

*திருமுகம், அவயவங்களோடு காட்சிதரும் பெருமாள், நடராஜர், விநாயகர், முருகன், அம்பாள் ஆகீய தெய்வங்கட்கு சகுண (உருவ) மூர்த்திகள் என்று பெயர். ஏனெனில் அவை புருஷ அல்லது ஸ்த்ரீ ரூபங்களில் உள்ளன.*

*ஆகவே நிர்குணமான அருவம், நிர்குண-சகுண (அரு-உரு) தெய்வங்களையும், சகுண (உரு) மூர்த்தி - களையும் பக்தானுக்ரஹத்திற்காக தோற்றுவிக்கிறது.*

## *அவதார தெய்வங்கள்*

*சகுண தெய்வங்கள் தேவைப்படும் போது, சாதுக்களைக் காக்கவும் தர்மத்தை நிலை நாட்டவும் பல அவதாரங்கள் எடுக்கின்றன. உதாரணமாக ஸ்ரீராமர், ஸ்ரீகிருஷ்ணர் ஆதிசங்கரர் முதலிய அவதாரங்கள்*

*அஜாயமணோ பகுதா விஜாய தே*

*– (புருஷ சூக்தம்; தைத்தரீய உபநிஷத்)*

*பிறப்பற்ற கடவுள் பல ரூபங்களில் பல நாமங்களில் காட்சியளிக்கிறார்.*

*பரித்ராணாய ஸாதூனாம் வினாசாய ச துஷ்கிருதாம்*
*தர்ம ஸம்ஸ்தாபநார்த்தாய ஸம்பவாமி யுகே யுகே*
*– (ஸ்ரீமத் பகவத் கீதை, அத்தியாயம் 4, சுலோ. 8)*

இவ்வளவு சகுண தெய்வங்களும், நிர்குண-சகுண தெய்வங்களும் இருப்பது ஜீவிகளுக்கு ஒரு வரப் பிரஸாதம். நிச்சயமாக அவர்கட்கு ஏதாவது ஒரு தெய்வங்களில் பக்தி ஏற்பட வாய்ப்பு உண்டு. பெருவாரியான ஆஸ்திக மக்கள் சகுணோபாஸனையுடனேயே நிறுத்திக் கொண்டு விடுகிறார்கள். சகுண உபாஸனையில் ஆரம்பித்தாலும், ஒருவரது குறிக்கோள் நிர்குண பிரும்மை உபாஸனைக்கு அவசியம் செல்ல வேண்டும். ஆத்மானுபவமே முக்தி நிலை.

சிதம்பர க்ஷேத்திரத்தில் சகுண, நிர்குண-சகுண, நிர்குணத் தோற்றங்கள் ஒரே ஆலயத்தில் அமைந்திருப்பது மிகவும் ஆச்சரியமான காட்சி. தில்லையில் நடனமாடும் நடராஜப் பெருமான் சகுண மூர்த்தி. பிரகாரத்தில் தர்சனம் தரும் சிவலிங்க வடிவிலுள்ள மூலா நாதர்தான் நிர்குண-சகுண பிரும்மம். திருச்சபை மேடையில், நடராஜர் சன்னதிக்கு அருகே, அதனுடன் ஒட்டிய, ஆனால் உருவங்கள் ஒன்றுமில்லாமல், தங்க வில்வமாலைகள் தொங்கிக் கொண்டிருக்கும் சந்நிதிதான் சித்ரூபத்தில் (உருவமில்லாத) அருள் பாலிக்கும் சித்சபேசன்ன - நிர்குண பிரும்மம் சந்நிதி. இதுவே சிதம்பர ரஹசியம்.

அன்றாட வாழ்க்கையினின்று ஒரு உதாரணம்: பஞ்சு, திரிக்கப்பட்டு நூலாகி, நூலினால் ஆடை நெய்யப்படுகிறது. பஞ்சுதான் நிர்குணம் - அருவம். நூல் உருவமற்றது. ஆனால் நீண்ட ஏதோ ஒரு உருவம். அதனால் நிர்குண-சகுணம் (அரு-உரு). அணியும்

ஆடைகள் எல்லாம் உருவமுள்ளவை. அதனால் சகுணம் (உருவ). பஞ்சு இல்லாவிடில் ஆடை இல்லை. ஆகவே நிர்குண பிரும்மம்தான் எல்லாத் தோன்றங்கட்கும் அதிஷ்டானம், ஆதாரம்.

## *நிர்குண பிரும்மமாகிய அருணகிரியின் நிர்குண-சகுண, மேலும் சகுண தர்சனங்கள்*

உருவமற்ற சித் ஸ்வரூபனான அருண மாமலையை தியானிப்பது எல்லோராலும் முடியாது. ஆகவே, அருவமான அருணகிரியும், அரு-உரு வடிவங்களையும், உருவம் உள்ள வடிவங்களையும் எடுத்துக் கொண்டு அன்பர்களுக்கு அருள் பாலிக்கிறது.

ரமணோதயம் சந்தா விவரம்

**ஆண்டு சந்தா:** ₹ 75 **தனி பிரதி:** ₹ 20

**ஆயுள் சந்தா:** ₹ 1500 **5 ஆண்டு:** ₹ 350

## கிரிவலம் வரும் பௌர்ணமி நாட்கள் - 2013

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| *ஜூலை* | 22 | *திங்கள்* | *அதிகாலை* 3.00 | 23 | *செவ்வாய்* | *இரவு* 12.35 |
| *ஆகஸ்டு* | 20 | *செவ்வாய்* | *காலை* 10.18 | 21 | *புதன்* | *காலை* 8.18 |
| *செப்டம்பர்* | 18 | *புதன்* | *இரவு* 7.20 | 19 | *வியாழன்* | *இரவு* 8.18 |
| *அக்டோபர்* | 18 | *வெள்ளி* | *காலை* 5.35 | 19 | *சனி* | *காலை* 5.09 |
| *நவம்பர்* | 16 | *சனி* | *இரவு* 8.30 | 17 | *ஞாயிறு* | *இரவு* 8.58 |
| *டிசம்பர்* | 16 | *திங்கள்* | *பகல்* 1.20 | 17 | *செவ்வாய்* | *பகல்* 2.59 |

# ரிபு கீதை

## தியாகராஜன்

*அத்வைத சொரூபத்தின் அபேத நிஷ்டை உரைக்கும் ரிபு கீதையில் 26 வது அத்தியாயத்தை மீண்டும் மீண்டும் பாராயணம் செய்தால், அது நம்மை சமாதி நிலைக்குக் கொண்டு செல்லும் என்று ஸ்ரீபகவான் அருளியுள்ளார்கள். அந்த அத்தியாயத்தின் பாடல்களை, அவை தொடர்பாய் ஸ்ரீபகவான் அவ்வப்போது அருளியுள்ள விளக்கங்களோடு அடியவர்க்கு அர்ப்பணிக்கின்றோம்.*

*எதனிடையிற் சாதனமோர் நான்கு மில்லை*
*யெதனிடையிற் சற்குருநற் சீட னில்லை*
*யெதனிடையில் வேறுபடா ஞான மில்லை*
*யெதனிடையில் விளங்கியிடு ஞானி யில்லை*
*யெதனிடையி லுபயவித முத்தி இல்லை*
*யெதனிடையி லொருகாலு மொன்று மில்லை*
*யதனிடையிற் சங்கற்ப மணுவு மின்றி*
*யம்மயமா யநவரதஞ் சுகித் திருப்பாய்*

*(26/15)*

*எதனிடையில் வேதமுத னூலு மில்லை*
*யெதனிடையில் விசாரிக்கும் புருட னில்லை*
*யெதனிடையிற் சங்கைசமா தான மில்லை*
*யெதனிடையிற் சாதிக்கும் பட்ச மில்லை*
*யெதனிடையிற் றள்ளியிடும் பட்ச மில்லை*
*யெதனிடையிற் றன்னையலா தெவையு மில்லை*
*யதனிடையிற் சங்கற்ப மணுவு மின்றி*
*யம்மயமா யநவரதஞ் சுகித்தி ருப்பாய்*

*(26/16)*

*[வச. 1/169] கே: ஞானமார்க்கத்தில், சாதன சதுஷ்டயத்தை (நித்யா நித்ய வஸ்து விவேகம், வைராக்கியம், சமதமாதிகள், முமுட்சுத்வம்) முதலிற் பெற்றாக வேண்டுமென்று சொல்கிறார்கள். பகவான் உபதேசிக்கும் இவ்வழியோ வேறெதையும் அபேக்ஷிக்காது நேரே மையத்தை நாடி விரைந்து செல்கிறது.*

*ஸ்ரீபக.: ஆம். எல்லா துர்க்குணங்களும் அகந்தையைப் பற்றிக் கொண்டெழுவனவே. அகந்தை தொலைந்தால், என்றுமுள்ள ஆத்மா தானே பிரகாசிக்கிறது, அங்கே நல்ல குணம் பொல்லாக் குணம் ஒன்றுமில்லை. ஸ்வரூபம் நற்குணம், குணங்குறி யெதுவுமற்றது. குணங்கள் யாவும் மனத்தைப் பற்றியவையே. ஒன்றென்னும் எண்ணிக்கை மூலத்தைப் பற்றியே, இரண்டு மூன்று முதலாம் பன்மை எழுகின்றது. பன்மை யாவும் மனோமயம். இவ்விகற்பங்கள் எவையுமின்றி உள்ளபடி யுள்ளது ஆத்மஸ்வரூபம்.*

*[ஸ்ரீ ர.ம. பொன்மொழிகள் 141] ஸ்ரீபக.: ஆத்மானுபவம் வேண்டுமென்று விரும்புகிறவனுக்கு குரு அவசியமே. ஆத்மாவே குரு. இரு நிலையாகிய துவைத புத்தி இருந்துவரும் வரை, அதை அகற்றத் தகுதியுள்ள குருவைச் சார்தல் இயல்பே. ஆரம்பத்தில் சீடன் தன்னையும் தன் குருவையும் உடல் வடிவுடன் சம்பந்தப்படுத்திக் கொள்கிறான். ஆனால், குருவுடன் பழகப் பழக, தானும் குருவும் உடலற்ற ஒரே ஆத்ம சொரூபம் என்று உணர்கிறான். அந்தப் பூரண உணர்வே ஆன்மானுபூதி எனப்படுவது.*

*நமது அறியாமையால், குருவையும் நம்மைப்போன்றே ஒரு மனித வியக்தியாகக் கருதுகிறோம். ஆனால் அவரோ தன்னை அவ்வாறு கருதுவதில்லை; நிராகார ஸ்வரூபமாகவே (உருவம் ஏதும் அற்றவராகவே) என்றுமிருக்கிறார். நம்மை உண்மைநிலை சேர்க்கவே அவர் நமக்கு மனித வடிவில் காணப்படுகிறார்.*

*[ஸ்ரீ ர.ம. பொன்மொழிகள் 173]* கே: *நான் யாரென்று கேட்பதற்குப் பதிலாக, 'நீங்கள் யார்?' என்று விசாரிக்கலாமா? அப்படிச் செய்தால் என் திருஷ்டியெல்லாம் உங்கள் மேலேயே இருக்கும். ஏனெனில் உங்களை குரு ரூபமான ஈஸ்வரனாகக் கருதுகிறேன். 'நான் யார்' என்று கேட்பதைக் காட்டிலும் 'தாங்கள் யார்?' விசாரத்தாலேயே நான் தேடும் லட்சியம் கிட்டுவதாகலாம்.*

*பக.: நீ எம்மாதிரி விசாரணை செய்தாலும் கடைசியில் ஏகமாம் தானாகிய ஆன்மாவைத்தான் அடைய வேண்டும். நான், நீ, குரு, மூடன் இந்த வித்தியாசங்களெல்லாம் அறியாமைக்கு அறிகுறி. இருப்பது அகம் சொரூபமாம் பரமாத்மா ஒன்றே. மற்றவிதம் பாவிப்பதெல்லாம் தன்னைத் தானே ஏமாற்றிக் கொள்வதாம்.*

*ஆகையால், தோற்றமாம் பௌதிக வாழ்வை ஆன்ம விசாரத்தின் மூலமாய் இங்கேயே இப்பொழுதே கடப்பது உனது லட்சியமாக இருக்க, உடலுக்கே உரித்தாகிய நீ, நான் என்கிற பாகுபாட்டுக்கு இடம் எது? எண்ணங்களின் மூலத்தைத் தேடி மனம் உள்நாட, நீ எங்கே, நான் எங்கே? இங்ஙனம் நாடி, அனைத்தையும் தன்னுள் கொள்ளும் ஆன்மாவாக அமர்.*

*[ஸ்ரீ ர.ம. பொன்மொழிகள் 281]* கே: *ஜீவன் முக்திக்கும் விதேக முக்திக்கும் என்ன வித்தியாசம்?*

*பக.: வித்தியாசம் ஏதும் கிடையாது. இது குறித்துக் கேட்போர்க்கு விடை இதுவே: உயிருடன் உலவும் ஆன்ம ஞானியே ஜீவன்முக்தர் எனப்படுகிறார். உடல் வீழ்ந்து அவர் மறையும்போது விதேகமுக்தி அடைந்துவிட்டதாகக் கருதப்படுகிறார். ஆனால், வெளியிலிருந்து காண்போர்களுக்கே இந்த வித்தியாசம் எழுகிறது; ஞானிக்கு அல்ல. மரித்த பின்னரும்*

*மரிப்பதற்கு முன்னரும் அவரது ஆன்ம நிலைப்பாட்டில் மாற்றம் ஏதும் இல்லை. ஞானியை மனித வடிவிலே நினைவு கொள்கிறோம்; அல்லது அந்த வடிவில் இருப்பதாகக் கருதுகிறோம். ஆனால் அவரோ எப்போதும் ஆன்ம மயமே, ஒரே சமயம் உள்ளும் புறமுமாக இருந்துவரும் ஒன்றேயான மெய்மையே, அது தோற்றத்துடனோ வடிவத்துடனோ பிணை பட்டதல்ல என்பதை ஞானி உணர்கிறார். மெய்ஞ்ஞான அல்லது முக்தி நிலையில் வெவ்வேறு கட்டங்கள் கிடையா. ஆன்மிக விடுதலையில் தராதரங்களும் இருக்கமாட்டாது. ஆகையால், உடலுருவில் உள்ளபோது அமையும் முக்திநிலை பூத உடலைக் கிடத்தியபின் எஞ்சும் முக்தி நிலை என்பதான மாறுபாடுகளுக்கு இடமில்லை. ஆன்மாவே நிஜ நான், ஆன்மாவுக்கு அன்னியமாய்த் தனது உடலோ வேறெதுவுமோ இல்லை என்பதனை ஞானி அறிவான். அவ்வாறான ஞானிக்குத் தன் தேகத்தின் இருப்போ மரிப்போ எவ்வாறு வித்தியாசப்படும்?*

*[நினைவில் நிறைந்தவை, கனகம்மாள், பதிப்பு 1995, பக்.43] அண்ணல் ரமணர் தம்மை ஒரு நாளும் மகரிஷியென்று கூறிக் கொண்டதே கிடையாது. எவரையும் தமது சிஷ்யனென்று நினைத்ததுமில்லை. யாராவது உபதேசிக்கும்படி வேண்டிக் கொண்டால், யார் யாருக்கு உபதேசிப்பது? என்று மறுத்து விடுவார். நான் ஞானியென்றால் எனக்கன்னியமாக அஞ்ஞானி என்றொருவன் இருப்பதற்கு இடமேயில்லை. அப்படியின்றி நானும் எல்லோரையும் போன்ற ஒருவனே எனும் பட்சத்தில், அந்த உபதேசத்தினால் பயனேது மில்லை. மேலும், உபதேசம் பெற வேண்டுமென்று கேட்பவன் யார்? அவனை விசாரித்தறிந்தால் அதுதான் உண்மையான உபதேசம் என்பார்.*

*ஸ்ரீபகவான் அவர்கள் அருளிச் செய்துள்ள "உள்ளது நாற்பது" கிரந்தத்தின் 13 ஆம் பாடல் இதை மேலும் விளக்கும்:*



“ஞானம்ஆம் தானேமெய்; நானாஆம் ஞானம்அஞ்
ஞானமாம்; பொய்யாம்அஞ் ஞானமுமே – ஞானமாம்
தன்னைஅன்றி இன்றுஅணிகள் தாம்பலவும் பொய்
மெய்யாம்
பொன்னைஅன்றி உண்டோ? புகல்.”

[Face to Face with Sri Ramana Maharshi, *2011* Edition, Page *261]* சப் ரிஜிஸ்ட்ரர் நாராயணசாமி ஐயர் எனும் சீரிய அடியவர், “பகவானே, என்னால் ஆத்ம விசாரம் செய்ய இயலவில்லை. மற்ற ஆன்மிகப் பயிற்சிகளையும் செய்ய முடியவில்லை. எனக்கு உய்ய வழி உண்டா?” எனக் கேட்டு கண்ணீர் சிந்தினார். அப்போது ஸ்ரீபகவான், “உனக்கு உள்ளது நாற்பது தெரியுமல்லவா? அது உள்ள வஸ்துவை, உண்மையை விஸ்தரித்து, விளக்கி அருளுகிறது. அதை ஒவ்வொரு பாடலாகப் படித்துக் கொண்டேயிரு. காலப்போக்கில், அதன் வார்த்தைகள் மறைந்து அந்த உள்ள வஸ்துவே, உண்மையே ஒளிரும்” என அருளினார்கள்.

இதே உண்மையை பிருஹதாரண்யக உபநிடதம் (4.3.22) “எவன் ஆத்மஸ்வரூபத்தை உணர்ந்து கொண்டு விட்டானோ, அவனுக்கு அந்த நிலையில் வேதம் அத்தனையும் வேதமில்லாமல் போய்விடும்” எனப் பறைசாற்றுகின்றது. (தெய்வத்தின் குரல், 2/323).

*[ஸ்ரீ ர.ம. பொன்மொழிகள் 158] ஸ்ரீபக.: தியானிப்பதற்கு தனக்கு அன்னியமான ஓர் புறப்பொருள் அவசியமாயிருக்கிறது. ஆன்ம விசாரணையிலோ தானும் தான் அல்லாததுமான (அறிவும் அறிபடுபொருளுமான) ஒருமை நிலையைத் தவிர வேறு புறப்பொருள் கிடையாது. தியானத்திற்கும் ஆன்ம விசாரணைக்கும் வித்தியாசம் இதுவே.*

*ஆன்ம விசாரம் ஒன்றைத் தவிர மற்ற எவ்வித சாதனத்திலும் சாதனத்தை நடத்தும் பொருட்டு மனம் என்று ஒன்று இருந்தே ஆகவேண்டும். மனமின்றி அந்த சாதனையை நடத்துவதெப்படி? ஒருவர் சாதனத்தில் ஈடுபடும்போது அகந்தை பற்பல சூட்சுமமான உருவம் கொள்ளும். ஆனால் அது மட்டும் அழிவதில்லை. ஆத்ம விசாரத்தைத் தவிர மற்ற சாதனங்களால் அகந்தையை அழிக்க முயல்வது, திருடனே திருடனாகிய தன்னைப் பிடிக்கப் போலீஸ்காரன் ஆவது போலத்தான்! ஆன்ம விசாரத்தினால் மட்டுமே அகந்தையோ மனமோ உண்மையில் இல்லை, என்னும் சத்தியத்தை வெளிப்படுத்திக் கைவல்யமான ஆன்மாவின் சுத்த நிர்விசேஷ ஸ்திதியை உணரச் செய்ய முடியும்.*

*[திரு அருண்மொழி, 158, வச. 1/178] கே: தன்னை யுணர்ந்தவன் முன்னிலும் திறமையுடன் உலகிற்கு உதவுவானல்லவா?*

*ப: ஆம், ஆம் தனக்கயலாய் உலகம் ஒன்று இருந்தால் நன்றாய் உதவுவான்.*

*[வச. 1/178] கே: ஞானியாம் ஜனகன் அரசாட்சி புரிந்திருக்கிறான். மனோவியாபாரமின்றி விவகாரம் எப்படி நடக்கும்? அகண்டானுபவத்தே நிலைத்த ஞானியின் மனம் தொழிற்படுவதன் விளக்கமெப்படி?*

*ஸ்ரீபக.: ஜனகன் ஞானியென்றும், விவகாரம் புரிந்தானென்றும், அதெப்படி யென்றும் கேட்பது நம்*

*மனமே. ஜனகனுக்கு இவை போன்ற பிரச்னைகளெவையும் இருந்திரா. தனக்கயலெதனையும் அறியான் ஞானி.*

*கே: விவகாரங்கள் ஞானிக்குக் கனவு போலிருக்கக் கூடுமென் றெண்ணுகிறேன்.*

*ப: இந்த விளக்கம் நமது மனோவியாபாரமே.*

*கே: சகலம் ரமண மாயையே; ஆத்மாவைத் தவிர வேறெதுவும் இல்லையென்பதே உண்மை. இப்போதுணர்கிறேன்.*

*ப: அப்படியெனில் துவைதமில்லை, பேச்சுமில்லை.*

*[வச. 1/116] கே: மூர்த்தி, மந்திரம் முதலிய ஏதாவதொன்றில் மனத்தை ஏகாக்கிரமாக்குவதே நன்மை பயக்குமென்றும், மனோநாசத்தில் தீவிரமா யீடுபடல் ஆபத்திற் கொண்டுபோய் விடுமென்றும் சிலர் சொல்கிறார்களே, அதுவென்ன?*

*ஸ்ரீபக.: யாருக்கு ஆபத்துண்டாகும்? ஆபத்தோ சம்பத்தோ ஆத்மாவுக்கன்னியமாய் வேறெதுதான் இருக்க முடியும்? இடையறாது நான்—நான் எனச் சுடரும் அகண்ட போத சாகரத்தின் ஒரு சிறு குமிழியே அகங்கார வடிவனும் ஜீவன். குமிழியும் நீரே, நீருக்கன்னியமாய் அதற்கோர் இருப்புமில்லை. அது உடையுங்காற் கடலுடன் ஒன்றாகிறது; இருக்குங்காலும் அது கடல்நீர் மயமே. பெரும்பாலோரும் சர்வசாதாரணமான இவ் வுண்மையை யுணராது, கணக்கற்ற பற்பல வழிகளிலும் அவற்றின் சிக்கல்களிலும் கருத்தைச் செலுத்திக் குழப்பமுறுகின்றனர். எத்தனை மதங்கள், சித்தாந்தங்கள், கொள்கைகள்! அப்பப்பா! இவை யாவும் முடிவில் எதற்காக? தனதுண்மையை யுணர்தற்கே இத்தனை சாதனைகளும் துணைகளும் வேண்டியிருக்கின்றன!*

*[நான் யார், பக். 8] எல்லாம் ஈசன் செயலன்றோ?*

*ஸ்ரீபக.: இச்சா ஸங்கல்ப யத்தன மின்றி யெழுந்த ஆதித்தன் சன்னிதி மாத்திரத்தில் காந்தக்கல் அக்கினியைக் கக்குவதும், தாமரையலர்வதும், நீர் வற்றுவதும், உலகோர் தத்தங் காரியங்களிற் பிரவிருத்தித்து இயற்றி யடங்குவதும், காந்தத்தின் முன் ஊசி சேஷ்டிப்பதும்போல, ஈசன் சன்னிதான விசேஷ மாத்திரத்தால் நடக்கும் முத்தொழில் அல்லது பஞ்ச கிருத்தியங்கட் குட்பட்ட ஜீவர்கள் தத்தம் கர்மானுசாரம் சேஷ்டித் தடங்குகின்றனர். அன்றி, அவர் சங்கல்ப ஸஹித ரல்லர்; ஒரு கருமமும் அவரை யொட்டாது. அது, லோக கர்மங்கள் சூரியனை யொட்டாததும், ஏனைய சதுர் பூதங்களின் குணா குணங்கள் வியாபகமான ஆகாயத்தை யொட்டாததும் போலும்.*

# இனிவரும் திருநாட்கள் – 2013

| | | | |
|---|---|---|---|
| *ஜூலை* | 22 | *திங்கள்* | *குரு பூர்ணிமா* |
| *செப்டம்பர்* | 1 | *சனி* | *அருணை விஜய தினம்* |
| *அக்டோபர்* | 5 | *சனி* | *நவராத்திரி தொடக்கம்* |
| | 13 | *ஞாயிறு* | *சரஸ்வதி பூஜை* |
| | 14 | *திங்கள்* | *விஜயதசமி* |
| *நவம்பர்* | 3 | *ஞாயிறு* | *தீபாவளி* |
| | 8 | *வெள்ளி* | *கார்த்திகை தீப விழா தொடக்கம்* |
| | 17 | *ஞாயிறு* | *கார்த்திகை தீபம்* |
| *டிசம்பர்* | 19 | *வியாழன்* | *ஸ்ரீ பகவானது 134-வது ஜயந்தி* |

# நான் யார் தெரியுமா?விலிருந்து நான் யார் வரை

## டாக்டர் ஏ.வி. ராஜகோபாலன்

*பகுதி - 17*

*இந்திய தத்துவ நூல்கள் மூன்று வகையான மார்க்கங்களைப் போதிக்கின்றன. அவை முறையே கர்மம், ஞானம், பக்தி என்ற மூவகைப்படும். பொதுவாக வேதம் கர்ம மார்க்கத்தை உபதேசிக்கும் களஞ்சியமாகக் கருதப்படுகிறது. உபநிடதங்களும் பிரம்ம சூத்திரமும் பகவத் கீதையும் ஞான மார்க்கத்தைத் தெளிவு படக் கூறுகின்றன. இவை இக்காரணத்தால் "பிரஸ்தான த்ரயம்" என்று கூறப்படுகின்றன. பக்தி மார்க்கத்திற்கு இதிகாசங்களும் புராணங்களும் பின்பு வந்த பல்வேறு தோத்திரங்களும் பெரும் உதவி புரிகின்றன. இதுபோல தமிழ் மொழியில் திருமூலரின் திருமந்திரமும் மற்றும் பட்டினத்தார், தாயுமானவர் ஏனைய சித்தர் பாடல்கள் போன்றவை ஞான மார்க்கத்தின் வழிகாட்டிகளாக அமைகின்றன. தேவார, திவ்ய பிரபந்த பாசுரங்கள் இறைவனிடம் பக்திகொண்டு ஒழுக பெரிதும் உதவி புரிகின்றன.*

*மேற்கூறிய தொகுப்பு ஓரளவுக்கு சரியானதென்றாலும், கர்ம-ஞான மார்க்கங்களுக்கு இடையே பல*

*பாலங்களையும் இந்நூல்களில் காணலாம். குறிப்பாக வேதங்கள் பல அரிய தத்துவங்களை எளிய முறையில் விளக்குகின்றன. 'ஒன்றே தெய்வம்' என்று சில மதங்களும், பல தெய்வ வழிபாட்டை வேறு சில மதங்களும் போதிக்கின்றன. வேதங்கள் இவை இரண்டிலும் உள்ள அடிப்படைத் தத்துவத்தை எடுத்துரைக்கும். மேக்ஸ் முல்லர் என்ற அறிஞர் இதை* Henotheism *(*One in many*) என்ற சொல்லால் அழைக்கிறார். பல்வேறு தேவதைகள் வேதங்களால் போற்றப் படுகின்றன. அவை அனைத்தையும் முழுமுதற் பொருளாகவே வேதகாலத்து ரிஷிகள் போற்றுகின்றனர். தெய்வ வழிபாட்டில் அழகையும் (*beauty*) ஈடு இணையற்ற மேன்மையையும் (*splendour*) இவர்கள் கண்டனர். இத்துணை சிறந்ததா இந்தத் தெய்வீகம் என்ற வியப்பும் (*wonder*) பல இடங்களில் பார்க்க முடிகிறது. மேலும் பரம்பொருளை சத்தியத்தின் வடிவாகப் பார்க்கிறது வேதம். அது,*

*1) 'சத்திய தர்மன்' - சத்தியமே அதன் தருமம்*

*2) 'சத்திய சத்வ' - சத்தியமே அதன் பலம்*

*3) 'சத்திய சூனு' - சத்தியத்தின் புதல்வன்*

*என்று சத்தியத்தின் பல வடிவாக பிரம்மத்தை வேதங்கள் பறைசாற்றுகின்றன.*

*இறைவன் நேர்மை, வாய்மை, மெய்மை என்ற குணங்களின் பிழம்பாக இருக்கின்றான். மேலும் அவன் ஒரு 'பிரம்மாண்ட நியதி'க்கு உட்பட்டுச் செயலாற்றுகிறான்.*

*இதை 'ருதம்' என்று வேதங்கள் அழைக்கின்றன. இவ்வாறு பரம்பொருள் என்பதை சத்யம், ருதம் என்னும் உலகின் உயர்ந்த குணங்களின் ஒருங்கிணைந்த தோற்றமாக வேதங்கள் காண்கின்றன. இவ்வாறு பலவாறு அழைக்கப்பட்டாலும், பரம்பொருள் ஒன்றேயாம். இது அடிப்படை வேத நியதியாகும்.*

*ஏகம் சந்தம் பஹுதா கல்பயந்தி*

*(ருக் வேதம் 10.114.5)*

பரம்பொருளை ஆணாகவோ பெண்ணாகவோ குறிப்பிடாமல், 'தத்' (அது) என்று பொதுப்படையாகவே வேதங்கள் அழைக்கின்றன. கீழ்க்கண்ட வேத மந்திரம் அதைத் தெளிவு படுத்துகிறது.

*தத் ஏவாக்னிம், தத் ஆதித்யஸ்*
*தத் வாயுஸ் தத் உ சந்தரமா:*

*(யஜுர் 32.1)*

வருணனைக்கு எட்டாத அப்பரம் பொருள் அக்னியாக, சூரியனாக, வாயுவாக, சந்திரனாக இவ்வாறு பல்வேறு வடிவாகத் தோன்றுகிற்து. இது one in many, many in one என்ற உயர்ந்த அத்வைத மார்க்கத்தை நமக்குத் தெளிவாக உரைக்கிறது.

அதர்வண வேதம் மற்றொரு சிறப்பையும் தெளிவாகச் சொல்கிறது.

*ய ரதம் தேவம் ஏகவிருதம் வேத*
*ந த்வீதிய ந திருதீயஸ் சதுர்த்தோ நாப்யுச்யேத*

சான்றோன் இறைவனை ஒன்றாகவே பார்ப்பவன் - இரண்டாக, மூன்றாக நான்காக என்றெல்லாம் பிரித்து உணராதவன் - என்ற பேரறிவு நிலையை இந்த வரிகள் உணர்த்தும். இதில் ஒரு சுவாரஸ்யம். வேத மந்திரங்கள் சுருங்கக் கூறி விளங்க வைப்பதில் தேர்ந்தவை. அந்த விதிக்கு விலக்காக இங்கு அழுந்தந் திருத்தமாக இரண்டாக மூன்றாக என்று வரிசைப்படுத்தி பத்து வரை சொல்லி, இவ்வாறெல்லாம் எவன் இறைத்தன்மையை அறியாதவனோ... என்று தொடர்கிறது. வேதங்கள் பல்வேறு தெய்வங்களைப் பற்றி சொல்லுகின்றன. அவைகளின் புகழ் பாடப்படுகிறது. வேள்விகள் பல அந்த தெய்வங்களைக் குறித்து செய்யப்படுகின்றன. இந்திரனும், அக்னியும், வருணனும், மருத்துகனும் இன்னமும் பிற தேவதைகளும் பலமுறை

*போற்றப்படுகின்றன. இருப்பினும் இவையெல்லாம் ஒரு பரஞ்சோதியையே குறிப்பிடுகின்றன என்பது மேற்கண்ட அதர்வண வேத வரிகளில் நிரூபணம் செய்யப்படுகிறது.*

*இந்த மேலாண்மை எல்லா உயிர்களிடத்திலும் வியாபித்து உலகை நடத்திச் செல்கிறது. இதுவே உலகின் அசைவுக்குக் காரணகர்த்தா. "இது ஆண், பெண் என்ற வேறுபாடு இன்றி அனைவரிடத்திலும் ஒளிர்கிறது. இளைஞரிடத்திலும் இதுவே உணரப் படுகிறது. கைத்தடி பற்றி தளர்ந்து நடுங்கியவாறு செல்லும் வயோதிகரிடமும் இதுவே உந்து சக்தி. இது எல்லா படைப்புகளிலும் பரவி உள்ளது.*

*த்வம் ஸ்த்ரீ த்வம் புமான் அஸி*
*த்வம் குமார உத வா குமாரி*
*த்வம் ஜீரனோ தண்டேன வம்சசி*
*த்வம் ஜாதோ பவசி விஸ்வதோமுகH*

*(அதர்வண 10.8.27)*

*வேதகாலத்தில் ஆண்-பெண் இருவருக்கும் சம உரிமை அளிக்கப் பட்டிருந்தது. பெண் சிசுக்கள் ஆண்களுக்கு இணையாகக் கருதப்பட்டனர். சமுதாயத்தில் மூத்த குடிமக்களுக்கு உயர்ந்த ஸ்தானம் அளிக்கப்பட்டிருந்தது. எல்லோரிடத்திலும் ஒரே பரம்பொருள் குடிகொண்டிருப்பது சமுதாயத்தில் உணரப்பட்டது. வேத அத்வைதம் என்பது சில அறிவு ஜீவிகளால் மட்டும் உணரத்தகுந்த ஒரு புரியாத தத்துவம் அன்று. அது எங்கும் விரவி நின்ற 'சமூக பிரக்ஞை'. இந்தச் சூழலில் "நான்" என்ற பாவம் "பிரம்மம்" என்ற தத்துவத்துடன் ஐக்கியமாகிறது.*

*இந்தத் தத்துவ விளக்கம் பாரததேசம் முழுவதும் விரவி இருப்பதைக் காணலாம். இது அறிவு சார்ந்த நிலைப்பாடாக இன்றி உணர்வு பூர்வமாக ஏற்றுக் கொள்ளப்பட்டது.*

*இறைவன் ஒருவனே ("ஏக") என்ற கருத்தை திரும்பத் திரும்ப வலியுறுத்துகிறது வேதம்.*

*தமிதம் நிகதம் சஹ: ஸ ஏக*
*ஏக ஏகவிருத் ஏக ஏவ*
*சர்வே அஸ்மின் தேவா*
*ஏகவிருதோ பவந்தி*

*(அதர்வண XII. 4.2)*

*இந்த மந்திரத்தில் 'ஏக' என்ற சொல் ஐந்துமுறை வருவதைக் காணலாம். 'ஏகவிருத்' என்று அடிக்கோடிட்டு வேதம் அடித்துச் சொல்கிறது. வேத நூல்களில் இத்தகைய தத்துவக் கருத்துக்கள் விரவி வருவதைப் பல இடங்களில் காணலாம். உபநிஷத்துக்களும் வேதங்களும் சமகாலத்தில் தோன்றியவை. இவைகளின் காரணகர்த்தாவான ரிஷிகள் உயர்ந்த ஞானம் படைத்தவர்கள். சமுதாயத்தில் சீரிய கோட்பாடுகள் நிலைபெற்று இருக்கப் பாடுபட்டவர்கள். ஆகையால் வேதகாலம் 5000 ஆண்டுகளுக்கு முன்பாக ஒரு "ஒன்றில் பன்மை; பன்மையில் ஒருமை" என்ற மாபெரும் தத்துவ விளக்கை ஏற்றி வைத்தன. இந்தியா என்பது ஒரு பின்தங்கிய, வளர்ச்சி அடையாத நாடு என்ற எண்ணத்தோடு நம்மை ஆள வந்த மேலைநாட்டினர் நம்முடைய "தத்துவை மேலாண்மை"யைக் கண்டு வியந்து போயினர்.*

*இந்நிலை ஒரு சமுதாயத்தின் ஒட்டுமொத்த நாகரீகமாக வெளிப்படுகிறது. நூலறிவு ஓரளவுக்குத்தான் உதவும். ஆரம்ப கட்டத்தில் சாதகனுக்கு அது தேவைப்படுகிறது. படிப்படியாக பிரம்ம நிஷ்டையில் தேர்ந்த மனிதனுக்கு, நம்முடைய சாதாரண அளவுகோல்கள் தேவைப் படுவதில்லை. இதைத் திருமூலர் தெளிவுபடக் கூறுவார்.*

*கத்தவும் வேண்டாம் கருத்தறிந்து ஆறினால்*
*சத்தமும் வேண்டாம் சமாதியை கூடினால்*
*சுத்தமும் வேண்டாம் துடக்கற்று நிற்றலால்*
*சித்தமும் வேண்டாம் செயலற்று இருக்கிலே (1634)*

இந்தச் சமாதி நிலையை எய்திய பிரம்ம நிஷ்டர்களுக்கு படிப்பும், மந்திர உச்சாடனமும், உடல் சுத்தமும் (நீராடுதல் போன்ற நித்திய கர்மாக்கள்), எண்ணங்கள் நீங்கிய நிலையில் சிந்தித்தலும் தேவையற்றவை ஆகின்றன. சாதகனுக்கு ஆரம்ப நிலையில் இவை முக்கிய அம்சங்களாக அமைந்தாலும் மெய்ப்பொருளை அறிந்தவனுக்கு, சாத்திரங்கள், தோத்திரங்கள், அனுஷ்டானங்கள் போன்றவை நீற்றுப் போகின்றன. வெளிச்சூழல் அவனைப் பாதிப்பதில்லை. பதினாறு ஆண்டுகள் புளிய மரப் பொந்தினில் செயலற்று வாழ்ந்த நம்மாழ்வார் இந்நிலைக்கு சிறந்த எடுத்துக் காட்டாவார். இதை மேலும் விளக்குகிறது திருமந்திரத்தின் பின்வரும் பாடல்:

ஓதலும் வேண்டாம் உயிர்க்குயிர் உள்ளுற்றால்
காதலும் வேண்டாம் மெய்க்காய இடம்கண்டால் (1633)

இங்கு 'உயிர்க்கு உயிர்' என்ற சொல் பரம்பொருளைக் குறிக்கும். இந்நிலை ஆனந்த மயமானது. இதை அடைந்தவர்களுக்கு வெளிச்செயல்கள் தேவையற்றவை. அடுத்த வரியில் 'காதலும் வேண்டாம்' என்று முனிவர் குறிப்பிடுகிறார். காதல் செய்தல் என்பது இரு உயிர்களுக்கு இடையே நிகழும் செயல். மெய்யான தத்துவத்தைத் தனக்குள்ளே கண்டவர்க்கு, வெளியில் ஒரு சிவத்தை நேசிக்க வேண்டியதில்லை அல்லவா? இது உயர்ந்த சமாதி நிலை. ஜீவ-மரண போராட்டத்தைத் தாண்டிய நித்தியத்துவ அமரம். இந்நிலை எய்தியவருக்கு பிறப்பு-இறப்பு என்கிற பந்தங்கள் விடுபட்டும் போகின்றன. அடுத்த வரியில் திருமூலர் சொல்கிறார்

சாதலும் வேண்டாம் சமாதிகை கூடினால்

மரித்தலைத் தாண்டியவர்கள் அமரர்கள் ஆகின்றனர். சமாதி நிலையில் சாயுஜ்யம் என்ற பேற்றை அடைந்தவர்கள் நித்தியசூரிகளாய் இறைவன் சந்நிதானத்தில் ஒளிமயமாக வாழ்கின்றனர். இவர்கள் 'புனரவி ஜனனம் புனரபி மரணம்' என்ற வாழ்க்கைச்

*சக்கரத்தில் சுழலுவதில்லை. இந்தப் பாடலின் முதல் மூன்று வரிகளைப் பார்த்தோம். இறுதி வரியில், புலனைக் கட்டுப் படுத்தியவர்கள், இறைவனை நாடி ஆலயங்களுக்கோ இமாலயத்திற்கோ செல்ல வேண்டியதில்லை என்ற உண்மையை போதிக்கின்றார் தவமுனிவர்.*

*போதலும் வேண்டாம் புலன்வழி போகார்க்கே*

*மேலே குறிப்பிட்ட பாடல்கள், திருமந்திரத்தில் 'தவதூடணம்' என்ற தலைப்பில் (பாடல் எண். 1633, 1634) காணக் கிடைக்கின்றன. இந்தப் பிரம்ம நிஷ்ட நிலையை அடைந்தவர்கள் எவ்வண்ணம் இருப்பார்கள். அவர்களிடமிருந்து நாம் எதைக் கற்க வேண்டும் என்பதை உபநிடதங்கள் விளக்குகின்றன.*

*அத யத்தே கர்ம விசிகித்ஸா வா*
*வ்ருத்த விசிகித்ஸா வாஸ்யாத்*

*எதைச் செய்ய வேண்டும், எது நல்லொழுக்கம் ஆகும், எப்படி நடத்தல் அவசியம் என்ற ஐயம் மனித குலத்திற்கு அடிக்கடி ஏற்படுகிறது. மகாபாரதம் முழுவதுமே 'எது தர்மம்?' என்ற போதனையிலேயே எழுதப்பட்ட இதிஹாச நூல். இந்நிலையில் சான்றோரை அணுகி அவர்தம் உபதேசம் பெறவேண்டும். அவர்கள் எத்தகையவர் என்பதையும் உபநிஷதம் விளக்குகிறது.*

*யே தத்ர ப்ராஹ்மனா: சம்மர்சின:*
*யுக்தா ஆயுக்தா:*
*அலூ க்ஷா தர்ம காமா: ஸ்யு:*

*அவர்கள் நேர்வழி நடப்பவர்கள். பேரின்ப அனுபவம் பெற்றவர்கள். எப்பற்றிலும் சார்பு உடையவர்கள் அல்லர். அமைதியுடன் படபடப்பின்றி இருப்பவர்கள் (அலூக்ஷா:) தரும மார்க்கத்தில் முழு விருப்பத்துடன் ஈடுபட்டவர்கள் (தர்மகாமா:). இத்தகைய மனத்திட்பம் படைத்த சான்றோர்கள் வழியைப் பின்பற்ற உபநிடதங்கள் வலியுறுத்துகின்றன.*

*யதா தே தத்ர வர்த்தேரன்*
*ததா தத்ர வர்த்தேதா:*

***(தைத்ரீயம் 1-11)***

இதுவே அருச்சுனன் கேட்ட வினா. "ஸ்தித பிரக்ஞன் எப்படி இருப்பான், அவன் சமாதி நிலை எத்தகையது; அவன் எவ்வாறு பேசுவான், நடப்பான்?" என்ற கேள்விகளுக்கு பகவான் கிருஷ்ணர் அளித்த உபதேசம், புகழ் பெற்றதாகும். கீதையின் இரண்டாம் அத்தியாயத்தின் இறுதிப் பகுதியில் காணக் கிடைக்கும் இந்த அரிய பொக்கிஷம் காந்தியடிகளின் மனதைப் பெருமளவும் கவர்ந்தது.

இறைவனின் தத்துவமும், அதை உணர்ந்து கொண்ட சான்றோரின் தன்மையும் வேதகாலம் தொட்டு இன்றைய நாற்வரை ஒரு spiritual continuum என்ற முறையில் விரவிக் கிடப்பதைப் பார்த்தோம். இந்நிலை அடையப் பெற்றவர்கள், தந்நிலை இழக்கிறார்கள். பேரின்பப் பேற்றை அடைகின்றனர். 'நான், எனது' என்று பந்தங்களை இழந்து 'அது' என்று உணர்வை எய்துகின்றனர். இதுவே உபநிஷத மகா மந்திரமான 'தத்வமசி' என்ற நிலை. இது சாசுவதமான ஆனந்தத்தை அளிக்கும் பிரம்ம நிஷ்டை. இந்த 'தத்' என்ற இலக்கை நோக்கிப் பயணிப்பதே 'நான் யார்?' என்ற கேள்விக்குத் தக்க விடை.

(தொடரும்)


# ரமணோதயம்

Voluntary Services

| | |
|---|---|
| K. *சுரேஷ் ஜானகிராமன்* | *9444127770* |
| *ராஜேஷ்* M.S. | *9840075778* |
| *வஸந்தா ராகவன்* | *9445432335* |

# சதாசிவ பிரும்மமும் ப்ரஹ்மமும்

**பிர. கிரிதர ஜெகதீஷ்**

*சத்சித்ஆனந்தமே வடிவான தன்னுடைய ஸ்வரூபத்தை ஜீவர்களுக்கு நன்கு விளக்கிக் காட்ட பரம்பொருளே மனித வடிவில் பிறப்பு எடுக்கிறது. தான் ஒரு வாய் சாதம் சாப்பிட்டுக் காட்டி அதன் வாயிலாகத் தன் குழந்தைக்கு சிறிது சிறிதாக ஆகாரத்தை ஊட்டி வளர்க்கும் கருணை உள்ளம் கொண்ட தாய்போல, தன்னளவில் சாதன சாத்தியங்களைக் கடந்திருந்தும் ஆத்ம பசி கொண்ட முமுக்ஷுக்களுக்காக தானும் சாதனம் செய்து ஞானம் அடைந்தது போலவும் காட்டி சன்மார்க்கிகளுக்கு அவர்களுடைய யதார்த்த சொரூபத்தை எடுத்துப் புகட்ட மண்ணுலகத்திற்கு பகவான் அவ்வப்பொழுது வந்து செல்கிறார்.*

*இறைவனின் அருள் எண்ணங்கள் மகான்களின் மூலம் மண்ணுலக சரித்திரத்தில் பதிந்து விடுகின்றன.*

*கி.பி. 17ஆம் நூற்றாண்டில் அவதாரம் செய்து தன் வழியே பெரிய அருளமுதைக் கொட்டிச் சென்ற சதாசிவ பிரும்மேந்திரர், பிறகு கி.பி. 19ஆம் நூற்றாண்டின் இறுதியில் 20ஆம் நூற்றாண்டின் துவக்கத்தில் ஞான சூரியனாய் பிரகாசித்து கங்குகரை காணாத ஞான ஒளியை அனைவருக்கும் வாரி வழங்கிய பகவான் ரமண மஹரிஷியையும் இறை அடியார்கள் என்றும் தெவிட்டாமல் சிந்தித்துக் கொண்டே இருப்பார்கள்.*

*இருபெரும் அலை என வடிவெடுத்து வந்த இவ்வருள் மூர்த்திகளின் ஜீவிதம், அருள் உபதேசம் இரண்டும்*



என்றைக்கும் தொடர்ந்து அனைத்து சாதகர்களையும் தமது அருட்கடலுக்குள் லயப்படுத்திப் பரம ஆனந்தத்தை வழங்கிக் கொண்டேயிருக்கும்!

இவ்விரு அருளாளர்களும் பேசியும் பேசாதவர்களாய், பேசாமல் பேசியவர்களாய் இவ்வுலகத்தில் இருந்தனர். தன் அருள்நோக்கு ஒன்றினாலேயே அருள் நாட்டம் கொண்டவர்களின் உள்ளத்தில் வழியைக் காட்டி, அவர்கள் ஆன்ம தாகத்தைப் பூர்த்தி செய்தவர்கள்.

இவ்விரு மகான்களின் பூர்வாசிரமங்கள் மதுரையைச் சார்ந்தே நிகழ்ந்திருக்கின்றன. குழந்தைப் பருவத்தில் பிற்காலத்தில் ஞானியாய்ப் பிரகாசிப்பார்கள் என்கிற அறிகுறி ஏதுமின்றி வேடிக்கையும், விளையாட்டுமாய் வளர்ந்தவர்கள். தங்கள் தாயின் மடியில் தலை வைத்துப் படுத்து பிட்டுக்கு மண் சுமந்த ஈசனின் கதையைச் செவிமடுத்தவர்கள்.

*கர்மணா ப[3]த்[4]யதே தன்துர்வித்[3]யயா து ப்ரமுச்யதே*
*தஸ்மாத்கர்ம ந குர்வன்தி யத்ய: பாரத[3]ர்ஶின:*

*– (மகாபாரதம், சாந்தி பர்வம், 250:7)*

கர்மம் (செயல்) ஜீவனை பந்தப்படுத்துகிறது. ஞானம்தான் மோக்ஷத்தைத் தருகிறது. ஆகவே விடுதலையை விரும்புபவர்கள் கர்மத்தை விட்டு விட்டார்கள் என்கிற உபநிஷத்தின் கருத்தை ஈசனின் மண் சுமந்த கதை நமக்கு ஸ்தூலமாக செயல் வடிவம் தந்து விளக்குகிறது.

ஒரு சிறு தீப்பொறியாய் இக்கதை அப்பிஞ்சு உள்ளங்களில் நுழைந்தது. பின்னர் அதுவே ஞான



வைராக்கியம் என்னும் காட்டுத் தீயாய் பற்றிப் பிடித்து பரந்து விரிந்தது.

எப்படி?

சதாசிவ பிரும்மேந்திராளின் ஜன்ம நாமம் சிவராம கிருஷ்ணன் என்பதாகும். இவருடைய ஆரம்பகால வாழ்க்கையில் நிகழ்ந்த நிகழ்ச்சி யொன்று இவரிடமிருந்து கர்மம் கழன்று விழமுகாமையாய் அமைந்தது.

குருகுலத்தில் வேதவேதாந்த வியாகரண சாஸ்திரங்களைக் கற்றுத் தேர்ந்து தமது வீட்டிற்குத் திரும்பினார். தன்னுடைய வருங்கால மனைவியின் ருது விசேஷ வைபவம் வீட்டில் அமர்க்களமாக நடைபெற்றுக் கொண்டிருந்தது. நடந்து வந்த களைப்பு வயிற்றில் பசியைக் கிளறி விட்டது. தாயிடம் உணவு கேட்டார். பெரிய மனிதனைப் போல் நடந்துகொள் என்ற புத்திமதிதான் தாயிடம் இருந்து கிடைத்தது. விருந்திற்காக தயார் நிலையில் இருந்த எள்ளும் வெல்லமும் சேர்த்து தயாரிக்கப் பட்டிருந்த கலவையை அள்ளி வாயில் போட்டார். வருங்கால மனைவியாக இருக்கும் அப்பேதைப் பெண் இவ்விஷயத்தை அவருடைய தாயாரிடம் போய்க் கூறினாள்.

"உங்கள் பிள்ளையாண்டான் பெரிய மனிதராக்கும்! விருந்தில் படையலுக்காகக் காத்திருக்கும் பக்ஷணத்தைச் சாப்பிட்டு விட்டார்."

தாயோ கடுமையாக வசைபாடினாள். சிவராம கிருஷ்ணனுக்கு மனம் சலித்தது. வீட்டின் கொல்லைப்புறத்திற்கு வந்தார். வாயில் போட்டிருந்த எள்ளுருண்டை பக்ஷணத்தைக் கீழே துப்பினார். நேரே

கும்பகோணத்திற்கு, தாம் படித்த குருகுலத்திற்கே திரும்பிப் போனார். ஆசாரியார் உத்தரவுப்படி மைசூர் சமஸ்தான வித்வானாக பொறுப்பேற்றார். அங்கும் சச்சரவு எழுந்தது. சிவராமகிருஷ்ணன் தமது வாதத் திறமையால் அனைவரது வாயையும் அடக்கி விடுகிறான். மற்ற பண்டிதர்கள் தங்களது பாண்டித்யத்தை வெளிப்படுத்த வாய்ப்பில்லாமல் பிழைக்க வழியில்லாமல் போய்விடுகிறது.

மீண்டும் குடந்தைக்கு சிவராமகிருஷ்ணன் அழைக்கப்பட்டான். “மற்றவர்களின் வாயை மூடும் உன்னுடைய வாய் எப்பொழுது மூடும்?” என்று குரு வினவினார். இதன்பிறகு சிவராமகிருஷ்ணன் பேசவேயில்லை. அங்கே கர்மம் கழன்று விழுந்தது. ஞானம் சிறகடித்துப் பறந்தது.

பகவான் ரமணரின் வியாவஹாரிக உலகமும் இவ்விதமாகவே நிகழ்ந்தது. பகவானின் பூர்வாசிரம நாமம் வேங்கடராமன். சிறுவனான வேங்கடராமனுக்கு ஒரு வினோதமான பழக்கம் இருந்தது. உறக்கத்தில் ஆழ்ந்தால் அவனை எழுப்ப பிரம்மதேவனாலும் கூட முடியாத நிலை இருந்தது. ஆனால் அது வெற்று உறக்கம் அல்ல. முற்றிப் பழுத்த சமாதி அனுபவம் என்பதை உலகம் அறிய வாய்ப்பில்லை.

தந்தை மரணமுற்று அவருடைய உடல் கீழே கிடத்தப் பட்டிருந்தது. சிறுவனின் மனமோ விசாரத்தில் ஈடுபட்டிருந்தது. தந்தைதான் இருக்கிறாரே! பிறகு ‘போய்விட்டார்’ என்று எதைக் கூறுகிறார்கள் என்று அருகில் இருப்பவரைப் பார்த்துக் கேட்டார். இது வெறும் உடல், உடலுக்குள்ளே இருக்கும் தந்தை போய்விட்டார் என்ற பதில் வந்தது.

அன்றுமுதல் உடல் வேறு; தான் வேறு என்ற எண்ணம் மிகுந்து வரத் தொடங்கியது. மதுரையில் சிற்றப்பா வீட்டில் இருக்கும்போது மரணபயம் ஏற்பட்டது.

*வீட்டின் மாடியறையில் படுத்தவண்ணம் கீழ்க்கண்டவாறு சிந்தித்தார்.*

*“இதோ இந்த உடல் இறந்துவிட்டது. இன்னும் சற்று நேரத்தில் இதை எடுத்துச் சென்று தீயிட்டு விடுவார்கள். உடலின் அழிவோடு நானும் அழிந்து போய் விட்டேனா? நான் உடலா? இல்லை. ‘நான்’ உடலின் அழிவிற்குப் பிறகும் இருந்து கொண்டிருக்கும் ஆத்மா.”*

*ஆத்ம திருஷ்டி உயர்ந்து வரவர உலக திருஷ்டி நொடிந்து போனது. படிப்பில் கவனம் குறைவதாக வேங்கடராமன் மீது குற்றம் சாட்டப்பட்டது. வேங்கடராமனின் உள்ளமோ உலக மதிப்பீடுகளை உதாசீனப்படுத்தியது. உண்முகத்தில் அருணாசலனைத் தேடியது. தனக்குக் கொடுக்கப்பட்டிருந்த ஆங்கிலப் பாடப் புத்தகத்தின் பயிற்சிப் பாடங்களை எழுதிக் கொண்டிருந்தவருக்கு, தாம் செய்து கொண்டிருந்த கார்யம் தனக்கு முற்றிலும் சம்பந்தமற்றதாய் தோன்றியது. மனம் ஆத்மாவில் ஒட்டிக் கொண்டது. கர்மம் கழன்றது. பாடப் புத்தகங்களை தூரத்தில் வீசினார். அங்கேயே பத்மாசனமிட்டு நிஷ்டையில் மூழ்கினார்.*

*மூத்த சகோதரன் நாகசாமிக்கு இந்தச் செயல் முற்றிலும் ஆத்திரத்தை மூட்டியது. கடுஞ் சொற்களால் திட்டித் தீர்த்தார்.*

*“இப்படியெல்லாம் இருக்கிறவனுக்கு இதெல்லாம் என்னத்துக்கு?” என்று கோபத்துடன் வினவினார்.*

*வேங்கடராமன் குறிப்பு உணர்ந்தார். மாறுபாடு இல்லாத ஒன்றை அவரது இதயம் ஊடுருவித் தேடியது. ஊரைவிட்டுக் கிளம்பி பூலோகக் கைலாயமாம் திருவண்ணாமலையை மனதாரத் தழுவிக் கொண்டார் என்ற வரலாற்றை அன்பர் அனைவரும் அறிவீர்கள்.*

*வேங்கடராமன் என்ற மொட்டு ரமண பகவானாய் மலர்ந்து தன் ஞான மனத்தை வையகம் எங்கும் பரப்பியது.*

புற உலகத்தின் கதவுகள் மூடிக் கொள்ளும்பொழுது அகக் கதவுகள் நமக்காகத் திறந்து கொள்கின்றன என்பதையே இந்நிகழ்ச்சிகள் நமக்குக் காட்டுகின்றன.

இவ்விரு மகான்களுக்கும் அவர்களது அந்தர்முகத்தில் ஈசனே ஆத்மவடிவில் குருவாக விளங்கினார். அதனால்தானோ என்னவோ பிற்காலத்தில் தம்மிடம் ஒரு சாதகன் குருவை எப்படிக் கண்டுபிடிப்பது? என்ற வினாவிற்கு பகவான் ரமணர் கூறினார்:

“ஆஹா! ஆத்மாதான் குரு. ஸ்வயம்பிரகாசமாய் நான் நான் என்று சற்குரு உன் அகத்தே விளங்கிக் கொண்டிருக்க, புறத்தே குருவை நாடுவதேன்? குரு மாம்ஸத்தால் ஆன உடல் அன்று. அவர் சைதன்யம். குருவைத் தேடுகிற நீ யார் என்று பார். குருவின் அனுக்கிரஹம் தானே கிடைக்கும்.”

அன்பர்களின் பிரார்த்தனைக்கு மனம் இரங்கி சதாசிவ பிரும்மமும், சகஜ நிஷ்டையில் இருந்த ரமணரும் செய்யுள் வடிவங்களில் தங்கள் உபதேசங்களை வெளிப்படுத்தினர். தத்துவ ஆராய்ச்சிக்குரிய அற்புத ஞானப் பொக்கிஷங்களாக அவைகள் திகழ்கின்றன.

உலகம் சத்யம் என்ற எண்ணமே தவறுகளில் மிகப்பெரிய தவறு. அத்தவறினால் உலகம் என்னைத் திருப்திப்படுத்தும், பாதுகாக்கும் என்ற மோஹம் எழுகிறது. சதாசிவ ப்ரும்மேந்திராள் தமது உபதேசத்தால் இப்பிழையை சரி செய்கிறார்.

ஸர்வம் ப்ரஹ்மமயம் ரே ரே
கிம் வசனீயம் கிம வசனீயம்
கிம் ரசனீயம் கிம ரசனீயம்
கிம் படனீயம் கிம படனீயம்
கிம் ப4ஜனீயம் கிம ப4ஜனீயம்
கிம் போ4த்தவ்யம் கிம போ4த்தவ்யம்
கிம் போ4க்தவ்யம் கிம போ4க்தவ்யம்

*ஸர்வத்ர ஸதா3 ஹம்ஸத்4யானம்*
*கர்த்தவ்யம் போ4 முக்தி நிதா3னம்*

பொருள்:

“எல்லாம் ஒரே பிரம்மமயம். அடே.. அடே.. எல்லாம் பிரம்ம மயமாக இருக்கிறது. சொல்லத்தக்கது எது? சொல்லத்தகாதது எது? செய்யத்தக்கது எது? செய்யத்தகாதது எது? கற்கத்தக்கது எது? கற்கத்தகாதது எது? பக்தியோடு சேவை செய்யத்தக்கது எது? சேவை செய்யத்தகாதது எது? அறியத்தக்கது எது? அறியத்தகாதது எது? அனுபவிக்கத்தக்கது எது? அனுபவிக்கத்தகாதது எது? எப்பொழுதும் முக்திக்குக் காரணமான நான் நான் என்ற தியானமே செய்யத்தக்கது.”

ஒன்றுக்குப் பின்னால் எத்தனை பூஜ்ஜியங்கள் இருந்தாலும் அவற்றின் மதிப்பீடுகள் அந்த ஒன்றைச் சார்ந்தே நிற்கின்றன. ஒன்றை நீக்கிவிட்டால் வெறும் சூன்யமே எஞ்சி நிற்கிறது. அதுபோல உலக போக அனுபவங்கள், அறிவுகள் அனைத்தும் ‘நான்’ என்ற ஒரு மெய்யுணர்வைப் பற்றியே உயிர் வாழ்கின்றன.

‘த்வந்தாத்மஹம் ஜகத்’ உலகம் இருமை மயமானது என்பது ஒரு நியாயம். ஆகவே உலகத்தில் ஸமத்வம் என்பது சித்திக்காது. இருமை மயமான உலகம் முடிவு இல்லாத ஒரு தொடர்கதைபோல் இருக்கிறது. கதை எங்கு ஆரம்பித்து, இப்பொழுது என்ன நடந்து கொண்டிருக்கிறது, இனி எங்கே போகப் போகிறது என்கிற விபரம் இல்லாத ஒரு குழப்பம்போல் ஜகத் அனுபவம் இருக்கிறது.

ஆகவே இந்த இருமை மயமான உலக விஷயங்களுக்கு ஆதார சுதியான ‘நான்’-ஐ ஜிக்ஞாசு முதலில் தீர்க்க வேண்டும். ஈச்வர, உலக விஷயங்களைக் குறித்த பிரச்சனைகள் இந்த ‘நானை’ துருவி ஆராய்வதன் மூலம் தெளிவாக விடும் என்கிறார் ப்ரும்மேந்திராள்.

ரமணரின் அருள் விழிகள் இவ்விஷயத்தை எவ்விதம் நோக்குகிறது என்று பார்ப்போமா?

நாமன்றி நாளேது நாடேது நாடுங்கா
னாமுடம்பே னாணாட்டு ணாம்படுவ – நாமுடம்போ
நாமின்றன் றென்றுமொன்று நாடிங்கங்
கெங்குமொன்றா
னாமுண்டு நாணாடி னாமூனம்

பொருள்: "விசாரித்துப் பார்த்தால் நாமில்லாமல் நாளும் இல்லை, நாடுமில்லை. நாம் உடம்பு என்றால் ஏதாவது ஒருநாள் ஒரு நாட்டில் நாம் சம்பந்தப்பட்டவராவோம். ஆனால் நாம் உடம்பு அல்ல. நாம் இன்றும் அன்றும் என்றும் ஒரே சொரூபமாகவே இருக்கிறோம். இங்கும், அங்கும், எங்கும் ஒரே சொரூபமாகவே இருக்கிறோம். நமது ஞான சொரூபம் ஒன்றே சத்யம். நாளும், நாடும் மித்யா" (அதாவது அனுபவத்தில் மட்டுமே உண்மை; அறிவுபூர்வமாக இல்லை).

உலகம் என்னை திருப்திபடுத்தும் ஒரு ஸ்தலமாக இருக்கிறது என்ற தவறான எண்ணமே அனைத்து ஸம்ஸார ஆரவாரத்திற்கும் அடிப்படையாய் இருக்கிறது. நான்-ஐப் போலவே ஒரு தனியான இருப்பு உலகத்திற்கு இருப்பதாக ஜீவன் மதி மயங்கியிருக்கிறான்.

ஸ்படிக லிங்கம் தன்னளவில் எந்தவிதமான மாறுபாடும் உண்மையில் இல்லாதிருந்தும், தன் அருகில் வைக்கப்பட்ட சிவப்பு நிற மலரின் நிறத்தைப் பொய்யாகப் பிரதிபலித்து தானும் சிவப்பு நிறமாகத் தெரிவதுபோல, சத்வஸ்துவாகிய பிரம்மமாகிய என்னிடமிருந்து சத்-அம்சத்தை மாயையானது தான் வாங்கிக்கொண்டு, தனது 'இல்லாமை'யைப் பிரம்மமாகிய என்னிடம் கொடுத்து இருக்கிறது. இதைத்தான் தாதாத்மியம் என்று சாஸ்த்ரம் கூறுகிறது.

இரு வேறு பொருள்கள் பரஸ்பரம் தத்தமது அம்சங்களைப் பொய்யாக மற்றவைகளுக்குக் கொடுத்து,

மற்றதின் அம்சத்தைப் பொய்யாக எடுத்துக் கொண்டால் அதற்குப் பெயர் தாதாத்மியம் என்று பெயர்.

சைதன்யமாகிய நான்-க்கும், ஜடமாகிய மாயையின் கார்யமாகிய உடலுக்கும் இடையே தாதாத்மியம் ஏற்பட்டுள்ளது. இதைத் தெளிவாக அடிக்கோடிட்டுப் பிரித்துக் காட்டுகிறார் பகவான்.

நாமன்றி நாளும், நாடும் இல்லை. நம்மிடத்திலேயே அவைகள் தோன்றுகின்றன. நம்மிடத்திலேயே ஒடுங்குகின்றன. ஆகவே நம்மிடமே நாம் இருந்து பழக வேண்டும். நாமாக இருப்பதுதான் அனைத்துமாக இருப்பதாகும். அதுவே மோக்ஷம் என்கிறார் பகவான் ரமண மகரிஷி.

சதாசிவ ப்ரும்மேந்திரர் எழுதிய ஆத்மவிலாஸம் என்கிற ஒரு நூலில் 'ஜீவன்முக்தி' பற்றிய அவருடைய கருத்தைப் பார்ப்போம்.

கச்சாமி குத்ர கிமஹம் கரவாணி கிம்வா
க்ருஹ்ணாமி கிம பரிஜஹாமி மயிப்ர பூர்ணே
நிர்வ்யாஜ ஸௌக்ய ஜலதௌ பரித்ருஸ்ய மானம்
பேனாதிகம் ஜகதிதி ஸ்திர நிஸ்சயோ மே

பொருள்: "நான் எங்குப் போக வேண்டும்? செய்வதற்கு என்ன இருக்கிறது? வைத்துக் கொள்ள என்ன இருக்கிறது? விட்டுவிட என்ன இருக்கிறது? கடலில் நுரை தோன்றி மறைவதுபோல பரிபூர்ண ஸஹஜானந்த ஸாகரனாகிய என்னிடத்தில் இந்த ஜகத் தோன்றுகிறது என்பது என்னுடைய ஸ்திரமான முடிவு."

ஸம்ஸாரம் என்கிற மனக்குறையை ஸாஸ்த்ரம் பலவிதங்களில் படம் பிடித்துக் காட்டுகிறது. "கிமஹம் ஸாதுநா கரவம் கிமஹம் ஸாது அகரவம் இதி". இதை நான் ஏன் செய்தேன். இதை ஏன் செய்யாமல் விட்டு விட்டேன் என்கிற ரீதியான ஸம்ஸாரத் துயரம் ஜீவன்முக்தனிடம் இருக்காது என்று உபநிஷத் கூறுகிறது.

*பகவான் ரமணர் 'ஜீவன்முக்தி'யை எவ்விதம் நோக்குகிறார்?*

***தன்னை யழித்தெழுந்த தன்மயா னந்தருக்***
***கென்னை யுளதொன் றியற்றுதற்குத் – தன்னையலா***
***தன்னிய மொன்று மறியா ரவர்நிலைமை***
***யின்னதென் றுன்ன லெவன்.***

*பொருள்: "அஹங்காரமாகிய தன்னை நாசமாக்கி அதன் விளைவாய் எழுந்துள்ள தன்மயமாய் விளங்கும் ஆனந்தமே வடிவான ஜீவன்முக்தனுக்கு இனி மேற்கொண்டு செய்வதற்கு ஓர் கார்யம் என்று என்ன இருக்கிறது? இல்லை. காரணம் தன் சொரூபத்திற்கு அந்நியமாக அவர் வேறு எதையும் அறிவதில்லை. அவருடைய நிலைமை இப்படிப்பட்டதென்று எப்படி எண்ண முடியும்? (முடியாது)."*

*அபூர்ணமான மனதில்தான் ஆசை எழுகிறது. குறை மனதின் அறிகுறியே ஆசை என்று சொல்லலாம். தான் தேடும் ஆனந்தத்தின் விலாஸம் தானே என்று அறியாமல், தன்னை விட்டு மற்ற அனைத்தின் பின்னே ஜீவன் ஓடிக் கொண்டேயிருக்கிறான்.*

*விளைவு - ராவணனின் தலையைக் கொய்யக் கொய்ய மீண்டும் மீண்டும் புதிய தலைகள் தோன்றிக் கொண்டேயிருந்ததுபோல, ஆசைகளை திருப்திப் படுத்தப்படுத்த அவைகள் வேறு வேறு வடிவங்களில் தோன்றிக் கொண்டேயிருக்கின்றன.*

*ராவணனின் உடன்பிறப்பு விபீஷணனாலேயே ராவணனின் உயிர் இருக்கும் இடம் அவனுடைய நாபிஸ்தானம் என்று அறியப்பட்டு, அங்கே அஸ்த்ரம் செலுத்தப்பட்டு ராவண ஸம்ஹாரம் நிகழ்ந்தது போல, அஹங்கரத்தின் உடன்பிறப்பாகிய நான் யார் என்ற விசார ரூபமாகிய எண்ணத்தால் அஹங்காரம் அடையாளம் காட்டப்பட்டு முடிவில் அழிந்து போகிறது. அஹங்காரம் அழியப்பட்ட முக்தனுக்கு அவனைத் தவிர்த்து வேறு*

*எதுவும் இல்லாததால் மனம் பூர்ணமாக இருக்கும். அங்கு ஆசை எழுவதில்லை. ஆகவே அங்கும் செயலும் (கர்மம்) இல்லை.*

*அருள் இல்லாமல் உலக, மற்றும் ஆன்மிக விஷயங்களில் ஒரு அங்குலம்கூட முன்னேற்றம் கிடைக்காது. பேரதிசயங்களுள் பேரதிசயமாக மனித மனத்தின் உண்மையை அறியாமலே மனிதன் மறந்து போனதுதான் மிகப்பெரிய பேரதிசயம்.*

*மீனாட்சிசுந்தரேஸ்வரர் திருமண வைபவத்தில் கலந்து கொண்ட குள்ளன் அனைத்து உணவுப் பொருட்களையும் சாப்பிட்டும் பசி அடங்காது அரற்றியதுபோல, மனம் என்ற குள்ளன் நிறைவின்மை என்ற பசியோடு அலைந்து கொண்டிருக்கிறான்.*

*"சிந்தையை அடக்கிச் சும்மா இருக்கின்ற திறம் அரிது" என்பது ஒரு முனிவனின் வாக்கு.*

*எத்தனை கர்மங்கள்! எத்தனை யோகங்கள்! எவ்வளவு பக்தி முழக்கங்கள்! அவ்வளவும் சுத்த மனதை வேண்டுமானால் தருமேயொழிய அதை மிச்சமில்லாமல் துடைத்து எரிவதில்லை.*

*தாய்க் கரையான் அழிந்து போனால்தான் மற்ற கரையான்களும் அழிந்து போகும். அதுபோல மனதின் மூலத்தை, நானை நாட மனம் என்ற வடிவம் மறைந்து ஆத்மன் மட்டுமே எஞ்சி நிற்கும்.*

*ஆத்மவிசாரமே இதற்குரிய உத்தமமான வழி என்பதை பிரும்மேந்திரர் பிரமாணமாகக் காட்டுகிறார்.*

*சபல மந: குரங்கம்*
*சாரு க்ருஹீத்வா விமர்ஸ - வாகுரயா ।*
*நிக மாரண்ய - விஹார*
*ஸாந்த: ஸேதே ஸ்வ - தாம்நிகோ (அ)ப்யேக: ॥*

*பொருள்: "ஒரு நிலையில் சிறிதும் நில்லாது ஓடித் திரிகின்ற மனம் என்னும் மானை (நான் யார் என்னும்)*

*ஆராய்ச்சி வலைக்குள் பிடித்த பின்பு, அடர்ந்த காடு போன்ற வேதங்களில் (கர்ம காண்டத்தில்) இன்பமாகத் திரிந்து களைத்துப் போன ஒருவன் தன்னுடைய இடத்திலேயே அமர்ந்து அமைதி பெறுகிறான்."*

*பூர்வமீமாம்ஸை என்று சொல்லப்படும் வேதத்தின் கர்மகாண்ட வழியில் சென்று பலவிதமாக பூஜை, கர்மங்கள் செய்து, முறையாக தர்ம வழியில் ஆசைகளை ஓரளவு பூர்த்தி செய்து சித்த சுத்தியைப் பெற்று மனம் தன்முக நாட்டத்தை விரும்புகிறது. உபதேச உந்தியாரில் மனநாசத்தைப் பற்றி பகவான் என்ன கூறுகிறார்?*

***மனத்தி னுருவை மறவா துசாவ***
***மனமென வொன்றிலை யுந்தீபற***
***மார்க்கநே ரார்க்குமி துந்தீபற.***

*பொருள்: "மனதின் உருவத்தை, அமைப்பைக் கவனமுடன் ஆராய்ந்து பார்த்தால் மனம் என ஒன்று இல்லாது போய் விடுகிறது. மனமற்ற நிலைமை அடைவதற்குரிய உத்தமமான மார்க்கம் அனைவருக்கும் இதுதான்."*

*நம்முடைய கவனம் பெரும்பாலும் நம்மை விட்டுவிட்டு நமக்கு அந்நியமாக இருக்கும் பொருட்களையே பற்றிப் பிடித்திருக்கிறது. தன்னுடைய நிழலைக் கண்டு தானே குரைக்கும் நாயைப் போல, தற்கவனத்தை இழந்து அறிவே மனமாக உருமாறி வம்பளந்து கொண்டிருக்கிறது.*

*ஐம்புல விஷய சுகங்களில் உள்ள சத்யத்வ புத்தியால் மீண்டும் மீண்டும் நம்முடைய கவனசக்தி களவாடப் படுகிறது. அதன் விளைவாக அறிவின் நிழலான மனம் அறிவையே தன்வசப்படுத்தி பந்தத்தை உருவாக்கி ஜனன மரண பிரச்சனைகளைத் தோற்றுவிக்கிறது.*

*மனதை மனமாக இயங்க அனுமதிக்காமல், அறிவாக, உணர்வாக, நமது இருப்பு நிலையாக வைத்திருக்க*

வேண்டும் என்பதையே பகவான் 'மனதின் உருவை மறவாது உசாவ' என்ற வரிகளைச் சுட்டிக்காட்ட விரும்புகிறார்.

வேதம் விஹிதம கர்ம - பல காலங்கள் வேதம் கூறியபடி தர்ம வழியில் போகங்களை அனுபவித்தும், பூஜை, கர்மம் முதலிய அனுஷ்டானங்களைச் செய்தும் மனம் தூய்மை பெறுகிறது. தூய மனதில் வைராக்யம் வெளிப்படுகிறது. உலக போக விஷயங்களில் வைராக்யம் ஏற்பட்டவுடன் தற்கவனம், மன உண்முக நாட்டம் இயல்பாய் நடைபெறுகிறது.

காற்று வீசுவது நின்று போனால் குளத்தின் மேற்பரப்பில் தோன்றும் அலைகள் நின்று போய் குளம் யதார்த்தமாக இருப்பது போல கவன சக்தியில் உலகம் தனது சத்யத்வத்தை இழக்கும் பொழுது மனம் மனமாக இருப்பதில்லை. பழைய ஸம்ஸாரி நான் முற்றிலும் மறைந்து 'முக்தநான்' மட்டுமே எஞ்சியிருக்கிறது.

ஒருவர் மௌனமார் - நமது பேசாத பெருநிலையை நமக்கு உணர்த்த.

ஒருவர் மரணத்தைச் சந்தித்தார் - அறிவுபூர்வமாக நாமும் மரணமில்லாப் பெருவாழ்வு வாழ்வதற்காக.

இவ்விதம் இவ்விரு மகான்களின் உபதேசங்கள் நம்முடைய மன இருளை நீக்குகின்றன.


பகவானின் இருவேறு தோற்றங்களே இம்மாபெரும் முனிபுங்கவர்கள் என்பதை அருள் உலகம் அறிகிறது.

நமது பூர்ண நிலைமை நமக்கு ஞாபகப்படுத்தும் நோக்கம் ஒன்றே அவர்களுடைய அவதாரத்திற்குரிய காரணம்.

# H.வைத்தியநாதன்

திரு. H.வைத்தியநாதன் அவர்கள் திருநெல்வேலி மாவட்டம், மேலப்பாவூரைச் சேர்ந்தவர்கள். சென்னைப் பல்கலைக்கழகத்தில் வித்வான் (தமிழ்) பட்டம் பெற்றவர். ஆங்கில, சம்ஸ்கிருத மொழிகளில் மிகவும் தேர்ச்சி பெற்றவர். பற்பல துறைகளில் அவர் வெளிப்படுத்திய திறமை அசாத்தியமானது. திருவல்லிக்கேணியில் தமிழ் ஆசிரியராகப் பணியாற்றியிருக்கிறார். தமிழ்த் தாத்தா டாக்டர் உ.வே.சாமிநாத ஐயரிடம் மாணாக்கராக இருந்து தமிழ்ப்பணி உடனாற்றியிருக்கிறார். தமிழ் எழுத்தாளர் சங்கங்களில் முக்கியப் பொறுப்புகளில் இருந்து பணியாற்றியிருக்கிறார். இயல், இசை மற்றும் நாடகம் என முத்துறைகளிலும் பெரும்பங்காற்றியுள்ளார்.

இவருக்கு ஒருநாள் கனவில் பகவான் ரமணரின் காட்சி ஒன்று தோன்றியது. அதில் பகவானை மையமாக வைத்த பெரும் கூட்டத்தில் ஒருவர் ஒரு பெரிய மூட்டையை இவரிடம் கொடுக்க எத்தனித்து வரும்போது அம்மூட்டை இவர்மேல் போடப்பட்ட அவஸ்தையுடன் இவருக்கு விழிப்பு ஏற்பட்டது. இக்கனவு நடந்த சில நாட்களில் சீரிய ரமண பக்தராகிய ரமண பாதானந்தர் இவரை ரமண மகரிஷிகளின் தலையாய அடியவராகிய ஸ்ரீ முகவைக் கண்ண முருகனார் அவர்களிடம் அழைத்துச் சென்று அறிமுகப் படுத்தினார். என்ன ஆச்சரியம்! இவர் கனவில் இவர்மேல் மூட்டையை தூக்கிப்போட்ட உருவம் ஸ்ரீமுருகனார் என்பதை உணர்ந்தார். பலகாலமாக ஸ்ரீமுருகனாரின் சுமார் 30000 பாடல்கள் கோணிகளிலும் டிரங்க் பெட்டிகளிலும் சென்னை, பேராசிரியர் திரு. டி.எம்.பி. மகாதேவன் அவர்கள் இல்லத்தில் குவிக்கப் பட்டிருந்தன. அவ்வனைத்துச் செய்யுட்களுக்கும் செய்யுள் முதற் குறிப்பு அகராதி உருவாக்கும் பணி இவரிடம் ஒப்படைக்கப்பட்டது.



*இப்பணியை அனைவரும் பாராட்டத்தக்க வகையில் சிறப்பாக செய்து முடித்து ரமண அன்பர்களின் உலகிற்கு பெருந் தொண்டாற்றி உதவினார். இதன்மூலம் ரமண பக்தர்களின் நன்றிக்கும் உரியவரானார். இவர் தயாரித்த ஸ்ரீ முருகனாரின் செய்யுள் முதற் குறிப்பகராதி பின்னர் ஸ்ரீ முருகனாரின் அச்சிடப்படாதப் பாடல்களை தெரிந்தெடுக்க பெரிதும் உதவியது. இந்த ஒரு ரமணப்பணியே திரு. வைத்தியநாதன் அவர்களை ஸ்ரீ ரமண வானில் மங்காத நக்ஷத்திரமாக சுடர் விட்டு பிரகாசிக்க வைக்கிறது.*

*அன்னார் கடந்த 9-5-2013 அன்று தமது 95 வயதில் பகவானின் திருவடியை அடைந்தார். அன்னாரின் பிரிவால் வருத்தமுறும் அனைத்து ரமண அன்பர்களுக்கும் அன்னாரது குடும்பத்தாருக்கும் ரமணோதயம் தனது ஆழ்ந்த அனுதாபங்களைச் சமர்ப்பிக்கிறது.*

*அன்னாருடைய நினைவு நாள் 14-7-2013 ஞாயிறு காலை 8.30 முதல் மதியம் வரை சென்னை மீனாக்ஷி பெண்கள் கல்லூரி, கோடம்பாக்கம் K.R.S ஆடிட்டோரியத்தில் நடைபெறவுள்ளது. இவ்விழாவில் நீதியரசர் டி. ராஜு, பேராசிரியர், எம்.எஸ். சுவாமிநாதன், கிருஷ்ணா ஸ்வீட்ஸ் திரு. முரளி மற்றும் பிரம்மஸ்ரீ நொச்சூர் வெங்கட்ராமன் அவர்கள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பிக்கவுள்ளனர். இவ்விழாவில் ரமண அன்பர் திரு. கே. ஸ்ரீராம் எழுதிய பகவான் ரமணரின் "அருணாசல பஞ்சரத்னம்" அதற்கான விளக்கவுரை நூல் வெளியிடப்படவுள்ளது. முதற் பிரதியை டாக்டர் கே.எஸ். லக்ஷ்மி அவர்கள் பெற்றுக் கொள்கிறார்கள்.*

# செய்திகள்

ஸ்ரீ ரமண சத்சங்கம், நங்கைநல்லூர்

*12-5-2013 பகவான் ரமணரின் 63வது ஆராதனை மற்றும் ஆத்மானுபவம் புத்தகம் வெளியீட்டு விழா. இடம்: ஸ்ரீவரசித்தி விநாயகர் பிரவசன மண்டபம். பி.வி. நரசிம்ம சுவாமியின்* Self Realisation *எனும் பகவானின் வாழ்க்கை வரலாறு மற்றும் உபதேசங்கள் அடங்கிய ஆங்கில நூலின் தமிழாக்கமாக திரு. எஸ். சேஷாத்ரி (முன்னாள் கௌரவச் செயலர், அகில இந்திய சாய் சமாஜம்) அவர்கள் மொழிபெயர்த்த "ஆத்மானுபவம்" நூல் வெளியீட்டு விழா நடைபெற்றது. பூஜ்ய ஸ்ரீ ராமானந்த சரஸ்வதி (ஸ்ரீசக்ர ராஜேஸ்வரி பீடம், மதுரை) அவர்கள் இந்நூலை வெளியிட்டார். திருப்பூர் ஸ்ரீ கிருஷ்ணன் (ஆசிரியர், அமுதசுரபி மாத இதழ்) இந்நூலைப் பற்றிய சிறப்புச் சொற்பொழிவாற்றினார். இந்நூல் வெளிவருவதில் மிகவும் முனைப்பாகச் செயலாற்றிய நங்கநல்லூர் சத்சங்கத்தைச் சார்ந்த திரு. வெங்கட்ராமன், திரு. சுப்ரமணியம் மற்றும் செயலர் திரு. ராமமூர்த்தி ஆகியோரின் முயற்சி வியக்கத்தக்கது. இந்நூலின் பிரதிகள் அனைத்தும் இந்நூலை வெளியிடுவதற்கு அனுமதி அளித்த ஸ்ரீரமணாச்ரமம் மற்றும் ஸ்ரீரமண கேந்திரம், சென்னை போன்ற பிற சத்சங்கங்களுக்கும் அன்பளிப்பாகவே அளிக்கப்பட்டன. ரமணோதயம் இதழிற்கான காப்பு நிதிக்கு பயன்படும் வகையில் 200 பிரதிகள் ரமண கேந்திரம், சென்னைக்கு வழங்கப்பட்டன. ரமணோதயம் சார்பில், ரமண சத்சங்கம், நங்கநல்லூருக்கு நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறோம். இந்நூல் விற்பனைக்குக் "ரமணகேந்திரா டிரஸ்ட், மைலாப்பூர்" என்னும் முகவரியில் கிடைக்கும்.*

ரமண மையம், கும்பகோணம்

*பகவான் ரமணருக்கான திருக்கோயில் தஞ்சை மாவட்டம் பூண்டி வடவாற்றங்கரையில் எளிமையான முறையில் திரு. மாரியப்பன் போன்ற அன்பர்களால் அமைக்கப்பட்டுள்ளது*

*நாம் அறிந்ததே. 10-2-2013 அன்று கும்பகோணத்தைச் சார்ந்த ரமண அன்பர் திரு. அருள்நிதி எஸ். நாகராஜன் மற்றும் 25 பள்ளிச் சிறார்களுடன் இக்கோயிலுக்கு வருகை தந்து அக்ஷரமணமாலை பாராயணம் செய்தனர். கலந்து கொண்ட அனைவருக்கும் மதிய உணவும் அளிக்கப்பட்டது. பின்னர் இக்குழுவினர் தஞ்சை பெரிய கோயிலில் அமர்ந்து அக்ஷரமணமாலை பாராயணம் செய்தனர். 6-4-2013 கும்பகோணம் வெங்கட்ரமணா ஹோட்டல் அதிபர், திரு. பாலச்சந்தர் அவர்களால் பள்ளிச் சிறார்களுக்கு அன்பளிப்பு வழங்கப்பட்டது. 7-5-2013 அன்று பகவானின் 63வது ஆராதனை சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. 19-5-2013 அன்று 30 பள்ளிச் சிறுவர்களுடன் இம்மையத்தினர் திருவண்ணாமலை ஸ்ரீ ரமணாச்ரமத்திற்குச் சென்று அக்ஷரமணமாலை பாராயணம் செய்து பகவானின் அருள் பெற்று வந்தனர்.*

ரமண கேந்திரம், பொள்ளாச்சி

*25-5-2013 மற்றும் 26-5-2013 ஆகிய நாட்களில் ரமண சந்நிதிமுறை முற்றோதல், ஜோதி நகர், பொள்ளாச்சியில் அமைந்துள்ள ஜோதி லிங்கேஸ்வரர் திருக்கோயிலில் சிறப்பாக நடைபெற்றது. பகவானின் அணுக்கத் தொண்டர்களான திரு. குஞ்சு சுவாமிகள், திரு. வடிவுடையார் மற்றும் சோபா கவுண்டர் ஆகியோருடன் உறவு கொண்ட குடும்பத்தைச் சார்ந்த திருமதி. தமயந்தி மற்றும் ரமண குமார் அவர்கள் முன்னின்று இவ்விழாவின் அனைத்து ஏற்பாடுகளையும் வழக்கறிஞரும் ரமண அன்பருமாகிய திரு. செல்வகுமார் அவர்களின் ஆத்மார்த்தமான சேவையுடன் நடத்திக் கொடுத்தனர். இம் முற்றோதலை சென்னையைச் சார்ந்த திரு. வி. ரமணன் குழுவினர் குழுமியிருந்த சுமார் 80-க்கும் மேற்பட்ட ரமண அன்பர்கள் எளிமையாக ஓதும் வண்ணம் நடத்திக் கொடுத்தனர். திருவண்ணாமலை ஸ்ரீரமணாச்ரமத்தைச் சார்ந்த திரு. சந்திரமௌலி திரு. வாசுதேவன் ஆகியோரின் உதவியுடன் இங்கு அமைந்துள்ள சுப்ரமணிய சுவாமி திருக்கோயில் மற்றும் பாராயணம் நடைபெற்ற ஜோதி லிங்கேஸ்வரர் ஆலயத்திலும் சிவத் தொண்டர்களான அப்பர் மற்றும் கண்ணப்ப நாயனாரின்*

*சரித்திரத்தை வீடியோ திரைப்படமாக ஒளிபரப்பினர். இவ்விழாவிற்கு கோவை, சென்னை, உடுமலைப்பேட்டை ரமண மையங்களிலிருந்து அன்பர்கள் திரளாக கலந்து கொண்டனர். அனைவருக்கும் உணவு மற்றும் உறைவிடம் மிகவும் சிறப்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.*

திருமதி. பத்மா வெங்கட்ராமன்

*பகவானின் சீரிய அடியார் ஸ்ரீமுருகனாரிடம் பாடம் படித்து அவருக்குச் சேவை செய்வதில் இரட்டை சகோதரிகள் என்று பெயர்பெற்றவர்கள் திருமதி. டி.ஆர். கனகம்மாள் மற்றும் திருமதி பத்மா வெங்கட்ராமன் அவர்கள் ஆவர். திருமதி. பத்மா வெங்கட்ராமன் அவர்கள் பேராசிரியர் டி.எம்.பி மகாதேவன் அவர்கள் சென்னை அயனாவரத்தில் நிறுவிய சங்கர விஹாரை அவருக்குப்பின் பேணிப் பாதுகாத்து, ரமண சத்சங்க தொண்டை தொடர்ந்து வந்தவர். கடந்த ஜூன் 2 ம் நாள் மகாபூஜை தினத்தன்று தமது 87 வயதில் ரமண பதம் அடைந்தார்.*

ரமணாலயம், குரோம்பேட்டை

*ஜூன் 2 ஞாயிற்றுக்கிழமை மகாபூஜையன்று அருணாலயம், குரோம்பேட்டையில் காலை முதல் இரவு வரை திருவாசகம் முற்றோதல், திரு. அசோகன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. அன்றைய சிறப்பம்சமாக திருவாசகப் பாடல்களுடன் அவற்றையொட்டியமைந்த ரமண சந்நிதி முறையும் சேர்த்து விளக்கத்துடன் பாராயணம் நடைபெற்றது. இதற்கு முத்தாய்ப்பாக அன்று மதியம் இறைவனின் கருணையாக பெருமழை பெய்து அகமும் புறமும் குளிர்வித்தது குறிப்பிடத்தக்கது. சுமார் 100 அன்பர்களுக்கும் மேலாகக் கலந்து கொண்ட இப்பாராயணம் அன்னதானத்துடன் இனிதே நிறைவுற்றது.*

# ரமணோதயம் அன்பர்கள் ஓர் கலந்துரையாடல்

*ஆகுரா*

*ரமண கேந்திரா டிரஸ்ட், மைலாப்பூர்*

*ரமணோதயம் துவக்கப்பட்டு வெற்றிகரமாக 12 ஆண்டுகள் நிறைவுற்றமைக்காக ரமணோதய அன்பர்களின் சந்திப்பு மே மாதம் 19 ஞாயிறு காலை 9.30 மணி முதல் மதியம்வரை நடைபெற்றது. திரளாக ரமண அன்பர்கள் கலந்து கொண்ட இவ்விழாவில் பல்வேறு கருத்துப் பரிமாற்றங்கள் நடைபெற்றன. ரமணோதயம் மற்றும் ரமண கேந்திரா டிரஸ்ட் சார்பாகவும் ஆசிரியர் திரு. ராம்மோகன் இணை ஆசிரியர் திரு. தியாகராஜன் பதிப்பாளர் திரு. குமாரராஜா மற்றும் ஆலோசகர் திரு. ஜா ஜயராமன் ஆகியோர் உரையாற்றினர்.*

வேர்கள் போற்றப்பட்டால்தான்
விழுதுகள் வேர்களாக முடியும்

*ரமணோதய இதழ்கள் மிகச் சிறப்பாக அமைவதற்கு முக்கிய மூலகாரணமே இவ்விதழ்கள் ஸ்ரீரமணாச்ரமத்தில் வடிவமைக்கப்படுவதால்தான். இவ்விதழ் துவக்குமுன்பே ரமணோதயத்தை ஆசிர்வதித்து 'அண்ணா' என்று அன்புடன் அழைக்கப்படும் ஸ்ரீரமணாச்ரமத் தலைவர் வே.சு.ரமணன் அவர்கள் இதற்கான அனுமதியை அளித்து ஆதரித்து வருவது நமக்குக் கிடைத்த மிகப் பெரிய பாக்கியமாகும்.*

*ரமணோதயத்தின் ஆரம்ப நாட்களில், நிதி பெரும் சுமையாக இருந்த நாட்களில், மிகக் குறைந்த பொருட் செலவில் இதை அச்சேற்ற வேண்டிய சூழல் இருந்தது. அன்றைய நாட்களில், ரமண அன்பர் திரு. டி.வி.வெங்கட்ராமன் அவர்கள் வழிகாட்டலின்பேரில் மல்டிகிராப்ட் அச்சக உரிமையாளர் திரு. சத்தியமூர்த்தி அவர்களை இதற்காக அணுகினோம். 'ஒரு நல்ல காரியத்தை என்னால் செய்ய முடியாவிடினும், ஒரு நல்ல*

*காரியத்திற்கு என்னால் உதவ முடியும்' என்று இன்முகத்துடன் அன்று உதவ ஆரம்பித்தவர் இன்றும் அவ்வாறே தொடர்ந்து தொண்டாக ஆற்றி வருகிறார். நம்மால் 12 ஆண்டுகளுக்கு முன்பு, துவக்க நாட்களில் குறிப்பிட்ட ஆண்டு சந்தா ரூபாய் 75ஐ இன்றும் தொடர்ந்து வைத்திருப்பதற்கு மூலகாரணமே இவரது இச்செயல்தான். இதற்காக இவர் விழாவில் பாராட்டப்பட்டார்.*

*தவழ்ந்து வரும் ஒரு குழந்தை தனித்து எழ முயலும்பொழுது கொடுக்கப்படும் உதவிக்கரங்கள் என்றுமே மறக்க முடியாதவை. ரமணோதயம் 12 ஆண்டுகளாகத் தவழ்ந்து வளர்ந்து எழுந்துள்ளது. இதற்கான பெரும் உதவிக்கரம் இதன் வாசக அன்பர்களை மற்றும் புரவலர்களையே சாரும் எனும் உண்மை இவ்விழாவில் நினைவுகூரப்பட்டது.*

*கட்டுரைகள், கதைகள் என்று ரமணோதயத்தின் சிறப்புக்கு வித்திட்டு வளர்த்த திரு. ஏ.வி. சுப்பிரமணியம் மற்றும் ஏ.வி. ராஜகோபாலன் அவர்களும் கௌரவிக்கப்பட்டனர்.*

*ஸ்ரீரமணாச்ரமத்தில் இவ்விதழ்கள் வடிவமைப்பதில் மிகப் பெரும்பங்காற்றி வரும் ரமண அன்பர்கள் திருவாளர்கள் சிவசுப்பிரமணியன், தியாகராஜன் மற்றும் சென்னையைச் சார்ந்த திருமதி. வசந்தா ராகவன் ஆகியோர் சிறப்பிக்கப் பட்டனர்.*

*இவ்விதழ்களை ஒவ்வொரு ஆண்டும் திருவண்ணாமலை கார்த்திகை தீபத் திருவிழாக்களில் சந்தா சேர்ப்பதில் பெரும் முயற்சியெடுக்க உதவிய திருவாளர்கள் ஆர். மாதவன், வி. ரவிச்சந்திரன் மற்றும் ராமலிங்கம் மறைந்த திரு. பாலகுமாரன் போன்றவர்கள் போற்றப்பட்டனர்.*

*சந்தாதாரர்களின் முகவரிகளை சீர்படுத்துவதில் ஆரம்ப நாட்களில் உதவிய திரு. ராதாகிருஷ்ணன் அதன்பின்னர் அப்பணியைத் தொடர்ந்துவரும் திரு. சுரேஷ் ஜானகிராமன் மற்றும் இவ்விலாசங்களை ஸ்டிக்கர் வடிவத்தில் அச்சிட்டு ரமணோதய இதழ்கள் அன்பர்களை அடையப் பெரிதும் உதவிவரும் திரு. எம்.எஸ். ராஜேஷ் ஆகியோர் கௌரவிக்கப் பட்டனர்.*

*எப்பொழுதெல்லாம் நிதி பற்றாக்குறை ஏற்படுகிறதோ அப்போதெல்லாம் தனது நிறுவனத்தின் விளம்பரத்தை ரமணோதயத்திற்கு அளித்து ஈடு செய்வதிலும் இவ்விதழ்கள் அஞ்சல் அலுவலகங்களுக்குச் சென்றடைய வாகன உதவியும் அளித்துவரும் திரு. P.E. சங்கர் மற்றும் குடும்பத்தினருக்கு நன்றி தெரிவிக்கப்பட்டது. இவ்விதழின் கௌரவ ஆலோசகராகவும் அரிய கட்டுரைகளை அளித்து வருபவருமான திரு. ஜா. ஜயராமன் அவர்கள் பாராட்டப்பட்டார்.*

*ரமண கேந்திரா டிரஸ்ட்டைச் சார்ந்த டிரஸ்டிகள் திருமதி. மீரா பாலசந்தர், திருமதி. சாந்தா ராமச்சந்திரன், தலைவர் திரு. ஆர். வேங்கடகிருஷ்ணன் மற்றும் அலுவலகத் தொண்டாற்றும் திரு. கண்ணன், திரு. மோகன் அவர்களது பங்கேற்புகள் நினைவுகூரப்பட்டன.*

## கருத்துப் பரிமாற்றங்கள்

*இவ்விழாவில் கலந்து கொண்டு திரு. ஏ.வி. ராஜகோபால், திரு. எம்.எஸ். ராஜேஷ், திருமதி சாந்தா ராமச்சந்திரன், திருமதி. சியாமளா ராமச்சந்திரன், திரு. ராமலிங்கம், ஒட்டன் சந்திரத்திலிருந்து வந்திருந்த திரு. வடமலைக் கண்ணன், ராமநாதபுரத்தைச் சார்ந்த திரு. சிரஞ்சீவி எனப் பல அன்பர்கள் கீழ்க்கண்ட மேலான கருத்துக்களைத் தெரிவித்தனர்.*

*ரமணோதயத்தின் சந்தாவை ரூபாய் 75 லிருந்து 100 ஆக உயர்த்துவது.*

*ஊடகங்கள் மற்றும் இணையதளங்கள் மூலமாக ரமணோதயத்தின் தொண்டர்களை ஈடுபடுத்தி விளம்பரம் மற்றும் மேம்பாடுகளை சென்றடையச் செய்தல்.*

*தன்னார்வமிக்கத் தொண்டர்களை ஈடுபடுத்தி விளம்பரங்கள் பெறுதல்.*

*கிரிவலம் மற்றும் பிரதோஷ காலங்களில் பக்தர்களை அணுகி ரமணோதயத்தின் விற்பனையை அதிகரித்தல்.*

*பெண்கள் மற்றும் குழந்தைகளுக்கான சிறப்புப் பகுதிகளை உருவாக்குதல்.*

*ரமணோதயத்தின் அட்டைப் படங்கள் மிகவும் சிறப்பாக அமைந்துள்ளதால் இப்பக்கங்களை அப்படியே பத்திரப்படுத்தி சட்டம் போடும் வகையில் இதன் அளவை நீட்டித்தல்.*

*இவ்விழாவிலேயே கலந்து கொண்ட அநேக அன்பர்கள் காப்புநிதி அளித்து உதவினர். அனைவருக்கும் ரமணகேந்திரா டிரஸ்ட் சார்பில் மதிய உணவு அளிக்கப்பட்டது. வெளியூர் அன்பர்களுக்கு உறைவிடவும் உணவும் அளிக்கப்பட்டன.*

*ரமணோதயத்தின் சார்பில் கலந்துகொண்ட அனைவருக்கும் நன்றியை தெரிவித்துக் கொள்கிறோம்.*

---

## ரமணோதயம் காப்பு நிதி

## தொடரும் நன்கொடையாளர்கள்

| | | |
|---|---|---|
| திருமதி | V. புவனேஸ்வரி, சென்னை | 2000 |
| திரு | S. பஞ்சாபகேசன், சென்னை | 2000 |
| திரு | R. வெங்கடேசன், சென்னை | 500 |
| திரு | A. சீதாராமன், சென்னை | 1000 |
| திரு | A.R ரமணி, பெங்களூரு | 1000 |
| திரு | N. வெங்கடசுப்ரமணியன், சென்னை | 2000 |
| திரு | N. பாலகிருஷ்ணன், சென்னை | 500 |
| திரு | ராமலிங்கம், சென்னை | 1000 |
| திரு | A. பிரபாகரன், மீஞ்சூர் | 1000 |
| திரு | சுரேஷ் ஜானகிராமன், சென்னை | 10000 |
| திரு | S.S கோபாலன், சென்னை | 5000 |
| திருமதி | C. சாந்தா லக்ஷ்மி, மதுரை | 2500 |
| திருமதி | இந்திரா வெங்கடசுப்ரமணியன், சென்னை | 10000 |
| | D.A.V School, Adambakkam | 5000 |
| திரு | B ராஜாராம், குரோம்பேட்டை | 1250 |
| திருமதி | A.V. சாரதா, சென்னை | 1000 |

## பகவான் ரமணரின் சேவை மையங்கள்


| | | |
|---|---|---|
| ***மைலாப்பூர்*** திரு R. வேங்கடகிருஷ்ணன், ஸ்ரீ ரமண கேந்திரா டிரஸ்ட் | .......... | 24611397 |
| ஸ்ரீ ரமண கேந்திரா டிரஸ்ட் மேலாளர் கண்ணன் | .......... | 9940418375 |
| ***சூளைமேடு*** திரு V. ரமணன் | .......... | 9444172623 |
| ***கிழக்கு தாம்பரம்*** திரு M.A. ராமசாமி | .......... | 9790873138 |
| ***நங்கநல்லூர்*** திரு S. இராமமூர்த்தி | .......... | 22244667 |
| ***மாம்பலம்*** திரு M.K. வைத்தியநாதன் | .......... | 23716495 |
| ***விருகம்பாக்கம்*** திருமதி கௌசல்யா | .......... | 24790635 |
| ***குரோம்பேட்டை***, *ரமணாலயம்* | .......... | 9444261296 |
| ***கொளத்தூர்*** கே.ஆர். கோபாலகிருஷ்ணன் | .......... | 9884355454 |
| ***புதுச்சேரி*** *ரமண கேந்திரம்* | .......... | 0413-2272141 |
| ***மதுரை*** சோமசுந்தரம் | .......... | 04522348157/2346102 |
| ***இராமநாதபுரம்*** சிரஞ்சீவி | .......... | 9360047936 |
| ***திருச்சுழி*** ஹாலாஸ்ய பட்டர் | .......... | 9442004615 |
| ***மலையாண்டிபட்டினம்*** பாலசுப்பிரமணியம் | .......... | 9965622878 |
| ***பொள்ளாச்சி*** ரமண குமார் | .......... | ***9487016880*** |
| ***ஒட்டன்சத்திரம்*** வடமலைக்கண்ணன் | .......... | 9842912474 |
| ***பழனி*** என். சோமசுந்தரம் | .......... | 9942327770 |
| ***சேலம்*** குப்புசாமி | .......... | 0427-2295460 |
| ***வந்தவாசி*** டாக்டர் ரவி | .......... | 9787180757 |
| ***மடம்*** சுந்தரமூர்த்தி | .......... | 9942264556 |
| ***திண்டுக்கல்*** பழ. முத்தையா | .......... | 9443070924 |
| ***பூண்டி*** மாரியப்பன் | .......... | 9486576687 |

Ramanodhayam - Tamil Quarterly, Registered with the Registrar of Newspaper for India. RNI NO.: TNTAM/2001/5542

Printed and Published by: A. Kumar Raja, 20, Alamelu Mangapuram, Mylapore, Chennai 600 004 on behalf of Ramana Kendra Trust, 20, Alamelu Mangapuram, Mylapore, Chennai 600 004

Editor: Dr. S. Ram Mohan

*Printed at:* **Multi Craft,**
9, Appavu Gramani 2nd St.,
Robertsonpet, Mandaveli, Chennai 600 028.




## ஸ்ரீ மாத்ருபூதேச்வர, ரமணேச்வர ஆலயங்கள் கும்பாபிஷேகம்
## ஞாயிற்றுக் கிழமை 25-8-2013

<u>நிகழ்ச்சி நிரல்</u>

| | |
|---|---|
| 23-8-2013 வெள்ளி | <u>காலை 7 - 11</u> அனுக்ஞை, விக்னேஸ்வர பூஜா, சங்கல்பம், புண்யாஹவாசனம், ஆசார்ய வர்ணம், ஸ்ரீகணபதி ஹோமம், நவாவர்ண ஹோமம், பூர்ணாஹுதி, மகா தீபாராதனை <u>மாலை 5 - 8</u> யாகசாலை பிரவேசம், வாஸ்து ஹோமம், கலாகர்ஷணம் முதல்கால ஜபம், ஹோமம், பூர்ணாஹுதி, மகா தீபாராதனை, ருத்ர திரிஷதி மற்றும் லலிதா சஹஸ்ரநாம அர்ச்சனை. |
| 24-8-2013 சனி | <u>காலை 6.30 - 11</u> இரண்டாம் கால யாகசாலை பூஜை, ஜபம் மற்றும் ஹோமம், பூர்ணாஹுதி, மகா தீபாராதனை <u>மாலை 5 - 8</u> மூன்றாம் கால ஜபம், ஹோமம், ருத்ர திரிஷதி, ஸ்ரீரமண சஹஸ்ரநாமம் மற்றும் லலிதா சஹஸ்ரநாம அர்ச்சனை, பூர்ணாஹுதி, மகா தீபாராதனை. |
| 25-8-2013 ஞாயிறு | <u>காலை 5.30 - 11</u> நான்காம் கால பூஜை, ஜபம் மற்றும் ஹோமம் பூர்ணாஹுதி, மகா தீபாராதனை, யாத்ரா தானம், <u>மகா கும்பாபிஷேகம் (காலை 8.45-9.20)</u>, பகவான் மற்றும் தாயார் ஆலய மகா அபிஷேகம், மகா தீபாராதனை. |

Registered with the Registrar of Newspaper for India RNI No.:TNTAM/2001/5542



# மகா கும்பாபிஷேகம்

ஸ்ரீமாத்ருபூதேச்வர, ஸ்ரீ ரமணேச்வர மகாலிங்கங்கள்

23, 24 & 25 ஆகஸ்ட் 2013

ஸ்ரீரமணாச்ரமம்